திருமலை முருகன்
பிள்ளைத்தமிழ்

கழக வெளியீடு - ககஎ

கவிராச பண்டாரத்தையா

இயற்றிய

திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்

பேராசிரியர், பெருநாவலர்,

திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்

எழுதிய

அரும்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Feb., 1929.
Reprint: March, 1957.

THIRUMALAI MURUGAN PILLAITH THAMIZH

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

இனிய மெல்லிய இழுமெனுஞ் சொற்கள் வாய்ந்த தமிழ்மொழியில், அவ்வினிமை நலம் பொருந்திய பாட்டு வகைகளே முழுதும் அமைந்திருக்கின்றன. அவை யெல்லாவற்றுள்ளும், அவ்வினிமை நலத்தினைச் சுவை மிகுத்துக் காட்டுவது பிள்ளைத்தமிழ்ப் பாட்டாகும். மக்கள் வாழ்நாள் முழுமையிலும், 'பிள்ளைப்பருவ'மென்பது எத்துணை இனிமையானதோ, அத்துணை இனிமையானதே ஏனைத் தமிழ்ப் பாட்டுக்களினும் பிள்ளைத்தமிழ்ப் பாட்டென்பது. இனிக் கோவைப்பாட்டும் அனையதொன்றேயாயினும், அது களங்கமற்ற அன்பினிமை யுடையதன்றாம். மற்றுப், பிள்ளைப்பருவம் களங்கமற்ற நல்லெண்ணத்தையும், அவ்வெண்ணத்தின்வழியே களங்கமற்ற தூய அன்பையும் விளைப்பதாய்த் திகழ்தலால், அவைதம்மைப் பெற விரும்புவோரும் பிள்ளைத்தமிழ்ப் பாட்டுக்களில் உள்ளம் இடையறாது பழகுதல் இன்றியமையாததாகும். கடவுளிடத்திலும் பெரியாரிடத்திலும் அன்பிற் பழக விரும்பும் ஆசிரியன்மார்கள், அவர்களை அவ்வன்பிற்கினிய குழந்தைப் பருவத்தராய் உருவெண்ணி, ஆண்பாலானால் ஆண் குழந்தைகளின் விளையாட்டு வகைகளையும் பெண்பாலானாற் பெண் குழந்தைகளின் விளையாட்டு வகைகளையும் அமைத்து இனிய கொஞ்சு தமிழ்ச் சொற்களாற் பாடுகின்ற நூலே பிள்ளைத்தமிழெனக.

அவ்வகை வந்த பிள்ளைத்தமிழ் நூல்களுள் இத் 'திருமலை முருகன் பிள்ளைத்தமி'ழும் ஒன்று. திருமலையென்னும் முருகப்பெருமான் திருப்பதி, செங்கோட்டையை அடுத்துள்ளது. இப் பிள்ளைத்தமிழைச் சொல்லும் பொருளுஞ் சுவை விஞ்சும்படி இதன் ஆசிரியர் கவிராச பண்டாரத்தையா அவர்கள் மிகத் திறமாகப் பாடியிருக்கின்றார்கள்.

இதற்குப் பேராசிரியர், பெருநாவலர், திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்களைக்கொண்டு அரும்பொருள் விளக்கம் எழுதுவித்து நல்ல முறையில் யாம் இதனைப் பதிக்கலானோம். தமிழுலகம் இதனருமையையறிந்து பயனடையுமாக!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் இந்நூல் திருமலை என்னும் தலத்து எழுந்தருளியிருக்கும் செவ்வேள் முருகன்மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் நூல் என விரியும். திருமலை என்னும் பதி செங்கோட்டையை அடுத்துள்ளது. தென்காசி வட்டத்தைச் சார்ந்த பண்புழியைச் சேர்ந்தது. இதுவே இச் செய்யுள் நூலில் பண்பை நகர் என்று அழைக்கப்பெறுகின்றது. உலகினர் இப்பொழுது பண்புழி என்று வழங்குவது பைம்பொழில் என்று இருக்கவேண்டுமென்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சைவத்திருவாளர் டாக்டர், ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L., தாங்கள் எழுதி வெளியிட்டுள்ள 'ஊரும் பேரும்' என்னும் நூலில் குறித்துள்ளார்கள்.

இப் பிள்ளைத்தமிழ் அருளிய புலவர் முருகப்பெருமானிடம் ஈடுபட்ட பேரன்பர். இஃது இவ்வொரு பிள்ளைத்தமிழோடன்றி, திரிகூடாசலம் என்னும் திருக்குற்றாலத்தருகில் விளங்கும் திரு இலஞ்சிமா நகரில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான்மீதும் அழகிய இனிய பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இது குறித்துப் பாயிரம் பாடிய சண்முகதாசர் என்பவர், "மங்காத செந்நெல் வளர் செங்கோட்டையில், உதித்து நற்கலை பயின்றுயர் மகா வித்துவான், இயலிசை நற்கவிராச பண்டாரத்தையா, அவர்கள் ஆர்வமொடியற்றிய" என்னும் அடிகள் படிக்கத்தக்கன.

இந் நூலாசிரியர் கவிராச பண்டாரத்தையா எனப்படுவர். இவர்கள் 'செவ்வரண்' என்னும் செங்கோட்டையில் பிறந்து வளர்ந்த தமிழ்ச்செல்வர். ஐயா என்ற சிறப்பு அடைமொழி இவர்கள் வேளாளர்களுக்குக் குருக்களாயிருந்து வந்தவர்கள் என்பதைக் குறிக்கும். இவர்கள் பெண்வழி உரிமையாளராக சிவத்திரு சண்முகசுந்தரக் குருக்கள் என்பவர் பாளையங் கோட்டையில் விளங்குகின்றார். இவரின் மாதாமகியே (தாயைப்

பெற்ற பாட்டியார்) நம் பண்டாரத்தையா அவர்களின் செல்வப் புதல்வியாவர். இவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணப்புலமை சான்ற பெருந்தகையராய், ஒழுக்கநிறை குணசீலராய், நாற்கவி பாடும் நற்புலவராய்த் திகழ்ந்தவர். இவ் வுண்மை இவர்கள் இயற்றிய பிள்ளைத்தமிழ் நூல்களில் கண்டு இன்புறலாம். இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் விளங்கியவர் ளாவர். இந்நூல், 1929-ல் நம் கழக வெளியீடாக வெளிவந் துள்ளது. நூலில் சொற்சுவை, பொருட்சுவை, தொடைவளம், நடைவளம், கற்பனைத்திறம் முதலியவற்றைக் கண்ட அறிஞர் விருப்பின்படி சந்தி பிரித்து, குறிப்புரையுடன் தற்போது வெளியிடப் பெறுகின்றது.

இந் நூல்போல் வேறு முருகன் பிள்ளைத்தமிழ் நூல்களையும் குறிப்புரையுடன் வெளியிட்டுத் தமிழ்ப்பற்றையும், கடவுள் உணர்ச்சியையும் தமிழகத்தில் பெருக்கி வளர்க்க முற்பட் டுழைத்துவரும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திருவாளர் **வ. சுப்பையா பிள்ளை** யவர்கள் என்னை இப் பணியில் ஈடுபடச் செய்தமைக்குப் பெரிதும் மகிழ்ந்து என் உளமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்புள்ள,

புலவரகம், நெல்லை
20—3—1957

பு. சி. புன்னைவனநாதன்.

திருச்சிற்றம்பலம்

திருமலை முருகன்
பிள்ளைத்தமிழ்

காப்பு

வெள்ளைக் கணபதியை வேய்ந்தசடி லப்பெருமான்
பிள்ளைக் கணபதிதாள் பெற்றுரைத்தேன்—வள்ளியுடன்
வந்தகந்தன் காவி மலைபோல வாழவருள்
தந்தகந்தன் பிள்ளைத் தமிழ்.

(அருஞ்சொல் உரை) வெள்ளைக் கணபதி - வெண்ணிறம் வாய்ந்த விண்மீன் கூட்டத்துக்குத் தலைவனாகிய திங்களை. வேய்ந்த சடிலப்பெருமான் - சூடிய சடைக் கடவுளான சிவபெருமான். பிள்ளை - புதல்வன். காவிமலை - திருமலை. அருள்தந்த - அருள்கொடுத்த. கந்தன் - யாவர்க்கும் பற்றுக்கோடாகியவன்; உமையம்மையால் ஆறு வடிவங்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டவன். வாழ : வினையெச்சம். (க)

அவையடக்கம்

பிள்ளைத் தமிழாம் பெரியபசுஞ் செந்தமிழை
வெள்ளைத் தமிழாய் விளம்பினேன்—எள்ளுறுமென்
புன்மொழியைக் காட்டிப் புனிதத் தமிழ்ப்புலவோர்
நன்மொழியை மேம்படுத்த நான்.

(அ - ரை.) *பசுந்தமிழ் - இனிய தமிழ்.* **பசுமை** - *இளமை, இனிமை. வெள்ளைத் தமிழாய் - எளிதில் விளங்குந் தமிழ்ச்சொற் களாய். எள்உறும் என்புன்மொழி - இகழப்படும் எனது அற்பச் சொற்கள். புனிதம் - தூய்மை.* **மேம்படுத்த - மேன்மையுறச்** *செய்ய.* (உ)

க. காப்புப்பருவம்

பிள்ளைத் தமிழ் பாடும் இடத்து இரண்டாம் திங்களில் பிள்ளையைக் காக்க என்று திருமால் முதல் முப்பத்துமுக்கோடி தேவர் ஈறுகப் பல கடவுளர் காக்க என நூலிற் கூறுதல் மரபு.

[இந் நூற்குத் திருமால் வணக்கம் முதற்கண் கூறப்புகுந்தது என்னையெனின், "மங்கலம் பொலியும் செங்கண்மாலே சங்கு சக்கரம் தரித்தலானும், காவற் கடவுளாதலானும் பூவினட் புணர் தலானும்" என்பவாகலான்.]

திருமால்

சீரார் கமலத் திருஈன்ற
தெய்வப் பிடியுங் குறக்கொடியுஞ்
சேரும் பெருமாள் வேற்பெருமாள்
செந்திற் பெருமாள் மயிற்பெருமாள்

காரார் குடுமித் திருமலையிற்
கருணைப் பெருமாள் குகப்பெருமாள்
கந்தப் பெருமாள் முத்தொழிலுங்
காக்கும் பெருமாள் தனைக்காக்க

பார்ஆ யிழையைத் திருமகளைப்
பாரப் புயத்தில் திருமார்பிற்
பதிக்கும் பெருமாள் வேயின்இசை
பாடும் பெருமாள் பசும்பெருமாள்

ஆரா அமுதங் கடைந்தமரர்க்
கருளும் பெருமாள் திகிரிசங்கம்
அணியும் பெருமாள் முதலைதடிந்
தானை காத்த பெருமாளே.

(அ - ரை.) கமலத்திரு ஈன்ற தெய்வப் பிடியும் குறக்கொடியும் - செந்தாமரை வாழ் இலக்குமி பெற்ற மகளிர் அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்பவர் பின் தெய்வயானை, வள்ளி என்னும் பெயரோடு பூவுலகில் முருகனை மணந்துகொண்டனர். பெருமாள் - பெருமையை ஆளுதலுடையவர். முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல். பார்ஆயிழை - பூமகள். புயம் - தோள். வேயின் இசைபாடும் - வேய்ங்குழல் வழி இசையைப் பாடுகின்ற. ஆரா - உண்ணு. திகிரி - சுதரிசனம் என்னும் சக்கரம். தடிந்து - கொன்று. ஆனை - கயேந்திரன் என்னும் யானை. (க)

சிவபெருமான்

வேறு

வனநதி அறுகு சிறுபிறை இதழி
வளர்சடை முடியின் மீதினில் சேர்த்திய
வரதனை நடன பரதனை இமய
மடமயில் தழுவும் வாமனைப் பாற்கடல்
வரமுனி மதலை அழஅருள் புரியும்
மழவிடை உடைய பாகனைக் கார்க்கடு
மணிமிட றொளிரும் அமலனை நமனை
வதைசெய்த சரண மாமலர்ச் சேர்ப்பனை

இனிமுனி வரர்கள் தவமுயல் இடமு
மினியபண் மொழியும் ஆரணக் கூட்டமும்
இருநில வனிதை முலையணி தரளம்
எனவிழும் அருவி நீர்உகத் தூற்றிய
இயல்பெறு வளமை பழமையும் உடைய
எழில்வரை எழிலி தோயுமுக் கோட்டினில்
இலகிய பலவின் நிழலமர் கடவுள்
எழுதிய சபையில் ஈசனைப் போற்றுதும்

அனகனை எமது குலகுரு பரனை
அருள்பெறும் அமரர் சேனையைக் காத்துமுன்
அடையலர் மனது படபட படென
அடலயில் நடவு வீரனைக் கார்த்திகை
அழகிய புளக களபமென் முலையின்
அமுதுணும் இளைய பாலனைத் தீர்த்தனை
அருமறை முடியில் நடமிடு பரனை
அறுமுக குகவி சாகனைத் தேர்ப்பொலி

தினகரர் ஒருபன் னிருவரும் ஒளிகள்
திகழ்உடு பதியும் ஏகுதற் கேக்குறு
சிகரியின் அழகு சினகர மருவு
திருமதி ளெயிலின் மேற்றிசைப் பாற்படு
தெரிவையர் எழுபெண் அரசியர் தமது
திருவருள் புரியும் வாவியிற் பூத்திடு
தினமொரு குவளை மலர்தனை உதவு
திருமலை விசய வேலனைக் காக்கவே.

(அ - ரை.) வனநதி-அழகிய கங்கையாறு. இதழி-கொன்றை. நடன பரதனை - பரத நாட்டியம் ஆடுபவனை. வாமன் - அழகன். வரமுனி மதலை-வசிட்டர் மைத்துனர் மகனான உபமன்னியர். "கண் பிசைந் தொருசேய் இன்னும் கலுழினுந் தனைக்கொ டுப்பன், மண் பிசைந் துண்ட மாயன் மறித்திட வலிய னல்லன்" என்று பாற்கடல் திரண்டு வெள்ளிமலையாகி நின்றது என்று பிரபுலிங்கலீலையில் கைலாசகதியில் வெள்ளிமலையைச் சிறப்பித்த பாடலில் இவ் வரலாறு வருகின்றது. கார்க்கடு - கரியவிடம். அமலன் - மல மற்றவன். சரணம் - அடி. ஆரணம் - வேதம். நிலவனிதை - பூதேவி. உக - சிந்த. போற்றுதும் - வணங்குவாம். அடையலர் - பகைவர். அயில்நடவு - அயிற்படையைச் செலுத்து. தீர்த்தன் - தூயவன். உடுபதி - சந்திரன். ஏக்குறுதல் - அச்சமடைதல். சினகரம் - கோயில். வாவி - தடாகம். விசயவேலன் - வெற்றி வேலன். திருமலைமுருகன் ஒரு பெரும் சிறப்பை நாடொறும் தவறாது பூக்கும் நறுமலர்க்குவளையே நவிலும். (உ)

உமையம்மை

வேறு

நிறம்வ ளர்த்திடு நீலிசொற் பாத்தரு
நிமலி மட்டவிழ் தாமரைத் தாள்துணை
நினைப வர்க்கருள் கோமளக் கோல்தொடி
நிலைமை பெற்றிரு நாழிநெற் சேர்த்துல

கறம்வ ளர்த்தவள் தூயபொற் கோட்டிம
அசல புத்திரி யாமளை கார்த்திகை
அருளு டைக்குழல் வாய்மொழிப் பார்ப்பதி
அடியி ணைப்புகழ் தாளெடுத் தேத்துதும்

மறம்வ ளர்த்தநி சாசரச் சிற்றர்கள்
வலிதொ லைத்தசு ரேசனைத் தாக்கியோர்
மயில் நடத்திய வீரனைச் சூர்ப்பகை
மறவ னைக்கதிர் வேலனைத் தேக்குறு

திறம்வ ளர்த்தசி வாகமப் பாற்கடல்
தனைம தித்ததி லேஎடுத் தூற்றிய
தெருள் ஒழுக்கமு தீசனுக் கூட்டிய
திரும லைக்குரு நாதனைக் காக்கவே.

(அ - ரை.) சொற்பா - சொல்லால் ஆகிய பாடல். மட்டு - தேன், மணம். கோமளம் - இளமை. கோல்தொடி - கோலில் அமைத்துச் செய்யப்படும் தொடி, அல்லது அழகிய தொடி; தொடி - வளை; தொடுக்கப்படுவது என்னும் பொருட்டு. கோடு - சிகரம். இமாசலபுத்திரி - இமயமலையரசன் புதல்வி, பார்வதி. யாமளை - பச்சை வடிவாள். குழல்வாய்மொழி - திருக்குற்றாலத் திறைவி பெயர். எத்துதும் - போற்றுவம். சீற்றர்கள் - கோபிகள். மறவன் - வீரன். தெருள்அமுது - தெளிந்த அவியாகிய அமுதம். செந்தமிழ்ச் சிவாகமத் திருப்பாற்கடலைக் கடைந்து அதிலிருந்தெழுந்த ஆராஅமுதினை அப்பனுகிய சிவபெருமான் திருச்செவிக் கூட்டிய திருமலைமுருகன். (ந)

உச்சிப்பிள்ளையார்

வேறு

சுரரை வளைத்துத் தலைமிசை குட்டித்
தொகைலோகக் காப்பினர்
தொழிலை அடக்கிக் கொடுமை செலுத்தித்
தொலையாமைத் தேக்கொடு

செருவில் எதிர்த்துப் பொருத தயித்தியத்
திறலாளைப் போர்ப்புரி
திருமலை யுச்சிக் கணபதி பற்பச்
சிறுதாளைப் போற்றுதும்

அரவு பிடித்துச் சடைஅணி கொற்றத்
தரனார்கண் தீப்பொறி
அறுவகை முற்றிச் சரவண முற்றிட்
டடியாரைக் காத்தொரு

பிரணவ நுட்பப் பொருளை விரித்துப்
பிரமாவைத் தாக்கிய
பிரச மலர்க்கண் குவளை மலைக்குள்
பெருமாளைக் காக்கவே.

(அ - ரை.) தயித்தியர் - அசுரர், திதிமைந்தர். **தேக்கு - தடைபண்ணு.** கண்பொறி - கண்ணினின்றும் பிறந்த தீ. பிரசம் - **தேன்.** பிரணவம் - ஓங்காரம். செந்தமிழ் ஓங்காரமே இயற்கை ஓங்காரமாகும் வரிவடிவின்கண் அதன் எழுத்தும் ஐந்து. அவை, அ, உ, ம், விந்து நாதம் என்ப. (ச)

திருமகள்

வேறு

இச்சைக் கிசைந்த வரங்கொடுக்கும்
எங்கள் குவளைத் திருமலையை
ஏத்தும் அடியார் வீட்டகத்தில்
எங்கோன் மாமன் மார்பகத்திற்

பச்சைப் பசுந்தாள் செங்கமலப்
பனிப்பூம் பொகுட்டில் குடியிருக்கும்
பவளத் துருவத் திருமடந்தை
பாகத் துணையைப் பணிந்திடுவாம்

கொச்சைக் குறவர் குலச்சிறுமி
குமரி குறத்தி பசுநிறத்தி
கொங்கைக் குவட்டிற் குடைந்துமற்றக்
குவட்டுக் கிரியைத் தகர்த்துழக்குஞ்

செச்சைப் புயபூ தரத்தழகன்
செழிக்கும் திருச்சண் முகத்தழகன்
செவ்வேல் அழகன் பண்பைநகர்ச்
செவ்வேள் பனுவல் தழைக்கவே.

(அ - ரை.) வீட்டகத்தில் - வீட்டில். பசுந்தாள் - இளந் தண்டு. உருவம் - வடிவம். குவடு - சிகரம், முடி. தகர்ந்து உழக்கும் - பேர்த்துக் கலக்கும். செச்சை - செஞ்சாந்தின் குழம்பு. புய பூதரம் - தோள்மலை. (௫)

நாமகள்

உதரத் திடையின் உலகொடுக்கி
உமிழ்ந்தோன் இருவர்க் கொருகொழுநன்
உந்தி மலரின் வந்துதித்த
ஒருநான் முகத்தன் திருமனையாள்

அதரச் சிவப்பி குழல்விழிகள்
அழகு கறுப்பி உடலிடம்பூண்
ஆடை முறுவல் வெள்ளைநிறத்
தம்மை வாணி பதம்பணிவாம்

மதுரக் கவிதை மழைபொழியும்
வரத அருண கிரிமேகம்
வழங்குந் தமிழ்மா ரியில்தோய்ந்து
வளர்பன் னிருபொன் வரையின்மிசை

கதிர்நித் திலமும் செம்மணியும்
கடம்பும் குரவும் வள்ளிகொங்கை
களபப் புழுகும் கமழ்ந்திலகும்
கந்தன் கவிதை செழிக்கவே.

(அ - ரை.) உதரம் - வயிறு. உலகு ஒடுக்கி உமிழ்ந்தோன் - ஊழிக் காலத்து வெள்ளத்தில் பூமியை உண்டு வற்றினபின் உமிழ்ந்த திருமால். இருவர்க்கு ஒரு கொழுநன் - சீதேவி பூதேவி யாகிய இருவர்க்கும் ஒப்பற்ற நாயகன். உந்திமலர் - கொப்பூழாகிய தாமரை. அதரம் - உதடு. குழல் விழி கறுப்பு - கூந்தலும், கண்ணும் கறுப்புநிறம். உடலிடம், பூண், ஆடை, முறுவல் - இவை வெண்ணிறம். கவிதை - கவி. வரத அருணகிரி மேகம் வழங்கும் தமிழ் மாரியில் தோய்ந்து - மேலான அருணகிரிநாதனாகிய மேகம் பொழியும் தமிழ்மழையில் படிந்து. அஃதாவது திருப்புகழ்ச் சந்தப்பாட்டில் மகிழ்ந்து. புழுகு - கத்தூரி. (சு)

பிரமதேவன்

படிஎழுலகும் படைத்துயிர்க்கும்
பலவேறுருவம் படைத்ததிலே
பரிந்துமுகபே தமும்படைத்துப்
பாராய்பனுவ லாட்டியென்று
பகரஅதற்கு நிகராக

முடியாவாணி அவன்படைத்த
முகங்கள்தோறும் இருந்திருந்து
மொழியும்பேதங் காட்டமின்னே
முழுதுமகிழ்ந்து நாவில்வைத்த
முளரிப்பிரமன் சரண்பணிவாம்;

வடியாக்கடலைச் சிறைபுரிந்து
மழலைச்சீதை சிறைமீட்ட
மாயன்மருகன் வச்சிரத்தால்
மலையின்சிறையைத் தடிந்தவிண்ணோன்
மதலைசிறையைத் தீர்த்தசூரக்

கொடியோனுடற்கே நான்குசிறை
கொடுத்துநடத்திக் கொடியுயர்த்த
குமரக்கடவுள் திருமலையில்
குடிகொண்டிருந்து விளையாடுங்
குரிசில்பனுவல் தழைக்கவே.

(அ - ரை.) படி - உலகம், பூமி. பரிந்து - விரும்பி. பேதம் - வேறுபாடு. பனுவல் - பாடல். மின்னை - நாமகளை. முளரி - தாமரை. சிறை புரிந்து - அணைகட்டி. சிறைமீட்ட - காவலிலிருந் தும் திருப்பிய. மலையின் சிறை - மலையின் இறகு. தடிந்த விண் ணோன் - வெட்டிய தேவேந்திரன். மதலை சிறையைத் தீர்த்து - சயந்தனைச் சிறையினின்றும் விடுவித்து. குரிசில் - ஆடவரில் சிறந்தவன். (எ)

காளி

வேறு

பண்அம் பணத்திதிரி சூலிகௌ மாரியொரு
பாலைக் கிழத்திநீலி
பச்சைப் பசுங்கமாரி கொற்றப் பெரும்படைப்
பசாசுவே தாளம்உடையாள்

கண்ணன் திருத்துணைவி கைச்சக் கரக்கௌரி
கல்வா கனக்கபாலி
கதிகொடுத் தாளும்என் திருமலைக் காளிசெங்
கமலசர ணம்பணிகுவாம்

வண்ணம் கறுத்திரு மேனியொரு பாதியின்
வடிவக் கருங்கடலின்நீர்
மட்டுமிஞ் சிப்பெருகி அப்புறச் செம்மையில்
வழிந்தொழுகும் வாறிதெனவே

நண்ணுந் திருக்கந்த ரத்தில்விடம் வைத்தருளும்
நகர்ஈசர் மார்பிலணியும்
நாமவெள் ளைப்பொடிப் புழுதிஆ டுங்குமர
நாயகன் கவிபெருகவே.

(அ - ரை.) அம்பணத்தி - துர்க்கை. பாலைக்கிழத்தி - பாலை நிலத் தலைவி; கிழவன் ஆண்பால். துணைவி - உடன் பிறந்தாள். கமல சரணம் - தாமரை அடிகள். மட்டும் - அளவும். கந்தரம் - கழுத்து. (அ)

வள்ளிதேவயானை, கன்னிமார், சத்தமாதர்கள்

வேறு

தருவிற் கிறையும் குறவர்களும்
தவளக் களிறும் செம்மானும்
தலைமை பெறவந் துதித்தருளுந்
தாய்மார் இருவர் சரண்போற்றி

மருவிட் டொழுகும் பைங்காவி
வாவிக் கரையின் மேவுகன்னி
மார்கள்எழுவர் சத்தகுல
மாதர் இவர்கள் சரண்பணிவாம்

துருவைப் பரியிப் பேரடலைத்
துணைவன் கரத்தால் துடைத்தேறின்
சூரைத் துடைத்தங் கவன்செனனத்
துயரைத் துடைத்துச் சொல்அவுணர்

கருவைத் துடைத்தோர் அயிராணி
கண்ணீர் துடைத்து மெய்யடியார்
கவலை துடைத்த திருமலையிற்
கந்தன் கவிதை விளங்கவே.

(அ - ரை.) தருவிற்கு இறை - இந்திரன். தவளக் களிறு - ஐராவதம். தாய்மாரிருவர் - வள்ளிதேவ யானையாகிய இருவர்கள். காவி வாவி - நீலோற்பலக்குளம். கன்னிமார்கள் எழுவர் - அபிராமி, இந்திராணி, கவுமாரி, காளி, நாராயணி, மகேசுவரி, வராகி என்னும் எழுமாதர்கள்: துருவைப்பரி - செம்மறியாடாகிய வாகனம். செனனத்துயர் - பிறவித் துன்பம். கரு - கருப்பம். துடைத்து - அழித்து. (க)

வீரபத்திரர், வயிரவர், சாஸ்தா, அட்டவசுக்கள், ஏகாதச ருத்திரர், அசுவினி தேவதைகள், சந்திரன், ஆதித்தர், பதினெண்கணம், சப்தரிஷிகள்

வேறு

வட்ட நிலத்தொ டடுக்குல கத்துள
வஞ்சம் ஒழிந்திடவே
மலைதக ரும்படி மயில்நட வுஞ்சிறு
மதலையை எந்தையையே

சிட்டர்கள் உத்தம பத்தி மிகுத்திடு
சிந்தை மகிழ்ந்திடவே
திருமலை யின்குவ டதனில் உறைந்தருள்
சிவசுத கந்தனையே

துட்டன் மகத்தை உழக்கிய விக்ரம
தும்மி நிரம்பியசீர்
தொலைவறு திண்திறல் வயிரவர் இம்பர்கள்
தொழுமணி கண்டனுமே

அட்ட வசுக்கள் உருத்திரர் மருத்துவர்
அம்புலி செங்கதிரோன்
அருள்பதி னெண்கண முனிவர் புரந்தரன்
அமரர் புரந்திடவே.

(அ - ரை.) அடுக்கு - ஒன்றின்மேல் ஒன்று அடுக்கப்பட்டிருப்பது. சிவசுதகந்தன் - சிவ குமாரனாகிய முருகன். துட்டன் - தக்கன். இம்பர்கள் - இவ்வுலகத்துள்ளவர்கள். அட்ட வசுக்கள் - எண்வகை வசுக்கள் :—அனலன், அணிலன், ஆபன், சோமன், தரன், துருவன், பிரத்தியூடன், பிரபாசன், புரந்தரன் - இந்திரன். அமரர் - தேவர். (க0)

உ. செங்கீரைப்பருவம்

[இருகையும், முழந்தாள்களும் ஊன்றித் தலைநிமிர்த்தி ஆடும் பருவம். இஃது ஐந்தாந் திங்களில் நிகழ்வது.]

மனத்தினில் நினைத்துருகும் உத்தமர் உளத்தின்மிசை
மங்காத வேதமுடிமேல்
மயிற்பரி திருப்பொலி புறத்தென தகத்தினொடு
வன்போரின் மேடமிசையே

புனற்சடை முடிக்கடவுள் அற்புத மடிக்குள்உமை
பொங்கார மார்புதனில்நீ
பொருப்பினை முதற்சிறை அறுத்தவிச யத்தினொடு
பொன்றுத தேவர்தலைமேல்

அனத்தினை உயர்த்தவன் முடித்தலை யினிற்சுரர்கள்
அன்பான வாறுதலைமேல்
அனிச்சமும் உருத்திய பதச்சிறு குறச்சிறுமி
அம்பாகு நீலவிழியாள்

தினைக்கதிர் வனத்திலும் மலர்ச்சரணம் வைத்தருக
செங்கீரை ஆடியருளே
திருக்கிளரும் உற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை ஆடியருளே.

(அ - ரை.) வேதமுடிமேல் - மறையுச்சியில். மேடமிசை - ஆட்டின்மேல். பொன்றுத - அழியாத. அனத்தினை உயர்த்தவன் - அன்னப் பறவையைக் கொடியில் எழுதியுயர்த்தவனாகிய பிரமன். உருத்திய - அழுத்திய. (கக)

கூராடும் வேல்விழிகள் குழையில் ஆடக்குழைகள்
கொண்டாடு தோளில் ஆடக்
குறுவியர்வு திருநுதற் சிலையில் ஆடச்சுட்டி
கூடத்து வண்டாடவே

வாராடு பொன்மார்பின் மாலைஆ டத்தரள
மாலையொடு சேலைஆட
மலராடு செங்கைதனில் வெள்வளைகள் ஆடநின்
மனதுநின் றூசல்ஆடத்
தாராடு மைக்குழல் சரிந்தாட வல்லிஇடை
தள்ளாட நகையாடியே
தளிராடு கற்பகச் சோலையிற் பந்தாடு
தனியானை முலையானைமேற்
சீராடு மான்மதச் சேருடும் ஒருகளிறு
செங்கீரை ஆடியருளே
திருக்கிளரும் உற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை ஆடியருளே.

(**அ - ரை.**) கூர் ஆடும் - கூர்மை பொருந்திய. குறுவியர்வு-சிறுவியர்வை. நகை ஆடி - சிரித்து. தனியானை முலையானை - ஒப்பற்ற தெய்வயானையம்மையின் முலையாகிய யானைகள். சேறு - குழம்பு. (கஉ)

மங்காத கற்பகக் காவினில் செந்திணையின்
வனசர மிசைப்பிறந்து
வண்மைச் செழுஞ்சர வணப்பொய்கை நதிசரமும்
வாழவே தவமுயன்று
பொங்கார முங்குரவும் நீபமுஞ் செச்சையும்
பூங்குவளை யும்கோடலும்
பூத்துப் பொலிந்தழகு வாய்த்திலகு பன்னிரு
புயக்கிரி சரத்தைமேவுங்
கொங்கார் கதுப்பிளங் குஞ்சரியும் மஞ்சரிக்
கோதைக் குறப்பிடியுமே
குணபேத மில்லா திடத்தினும் வலத்தினுங்
கூடப் பிணைக்கநடுவோர்
சிங்கார வச்சிரத் தூண்போல் இருப்பவன்
செங்கீரை ஆடியருளே
திருக்கிளரும் உற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை ஆடியருளே.

(அ - ரை.) வனசரம் - பெருங்காடு. ஆரம் - சந்தனம். கோடல் - காந்தள். மஞ்சரி - பூங்கொத்து. பிணைக்க - சேர்க்கப்பட. வச்சிரம் - வயிரம். (கரு)

கொந்துகமழ் சரவணப் பொய்கையின் மருங்கில்இரு
கோட்டொருவெள் ஏற்றிலேறிக்
கூர்மழுக் கையனும் தையலும் திருவுளங்
கூடக் கசிந்துருகியே

வந்துமக வாறுருவும் ஒருருவம் ஆகவே
மங்கைபார்ப் பதிஎடுத்து
மடியில்வைத் துச்சியின் முகந்துபுற நீவிமணி
வாய்தோறும் முத்தமிட்டே

இந்துமுக மண்டலத் துமைமங்கை கொங்கையின்
இழிந்தொழுகு பாலைவள்ளத்
தேந்திக் கொடுக்கக் குடிக்கும்அப் போதுபனி
ரண்டுகடை வாயின்வழியே

சிந்திவழி கின்றதென முத்தணியு மார்பனே
செங்கீரை ஆடியருளே
திருக்கிளரும் உற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை ஆடியருளே.

(அ - ரை.) மருங்கு-பக்கம். கோடு - கொம்பு. ஆறு உருவும்- ஆறு வடிவமும். முகந்து - மோந்து. புறம்நீவி - முதுகைத்தடவி. இந்து - சந்திரன். இழிந்து - இறங்கி. வள்ளம் - கிண்ணம். பன்னிரண்டு வாயின்வழி சிந்தும்பால் முத்துப்போன்றது என்க.

கால்பெயர்த் தசைநடைக் கொண்டுநளி னத்திலை
கறித்துக் குதட்டுமேதி
கன்றுக் கிரங்கிக் கனைத்துநீர் விட்டுமுற்
கால்வாரி நின்றுமுலையின்

பாலுகுத் திடஅது பரந்தோடி முப்பழப்
பங்கச் செழுங்கழனியிற்
பாய்ந்தொழுக அதனிடை கிடந்து சேருடும்
பருங்கரும் பகடுபூட்டிச்

சாலடித் துழும்உழவர் மார்பினில் தோளினில்
தலைதொறும் முகங்கடோறும்
தளிரடிப் பிடிநடைச் சாதிக் கடைசியர்கள்
தங்கள்நய னங்கள்போலச்
சேல்குதிக் குந்திருப் பண்பைநக ராதிபதி
செங்கீரை ஆடியருளே
திருக்கிளரும் உற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை ஆடியருளே.

(அ - ரை.) நளினம் - தாமரை. கறித்து - கடித்து. மேதி - எருமை. உகுத்திட - சொரிய. பங்கம் - சேறு. கரும்பகடு - கரிய எருமைக்கடா அல்லது கரிய எருது. பிடிநடை - பெண்யானை நடையையுடைய. கடைசியர்கள் - உழத்தியர்கள். நயனங்கள் - கண்கள். பண்பை நகர் - இக் காலத்துப் பண்பொழில் நகர் என்று வழங்கப்படுவது. திருக்கிளரும் - அழகு விளங்குகின்ற. (கரு)

வேறு

இனமுனி வரர்கள் குருமுனி குருபரன்
என்றே கொண்டாடும்
இவைஅவ ரொடுபொரு பகைநிசி சரர்பதி
எங்கே என்றேகி
மனவலி புயவலி படைவலி தவவலி
மஞ்சா ருஞ்சூரன்
மதலைகள் துணைவர்கள் கிளையுடன் அவனுடல்
வன்பா ரம்தீர
நனைமலர் சிதறியும் அரிஅயன் முதலினர்
நண்போ டும்பாட
நகைமணி வளையணி கரதல வயிரொடு
நம்பா சங்க்ராமா
தினகரர் விழியையும் அருள்செயும் ஒருமணி
செங்கோ செங்கீரை
திருமலை அறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) நிசிசரர்பதி - சூரபதுமன். மதலைகள் - குழந்தைகள். (கசு)

பசைஅறு நெஞ்சுடை அவுணர் பெரும்படை
பஞ்சாய் நொந்தேழு
பரவையின் மிசைபுக அலைகெட வடகிரி
பந்தாய் நின்றுட

விசையின் நொறுங்கிய திகிரி நெடுங்கிரி
விண்டே செந்தூளாய்
விடவிட அரவொடு கமடமு மசைவுற
வெந்தீ யும்காலும்

இசைபெறு மண்புனல் வெளியுடன் ஐந்தெனும்
எண்பூ தம்சோர
இமையவர் முனிவர்கள் துயரொடு மகிழஇ
ரண்டோ டொன்றேழு

திசைசுழ லும்படி மயில்நட வும்பதி
செங்கோ செங்கீரை
திருமலை அறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) பசை - பற்று. பரவையின்மிசை - கடலில். விண்டு - பிளந்து. விடஅரவு - நச்சுப்பாம்பு. கமடம் - ஆமை. தீ கால் மண் புனல் வெளி:- இவை ஐம்பெரும் பூதங்கள். நடவும் - செலுத்தும். செங்கோ செங்கீரை:- என்பது செங்கீரை ஆடியருள் என்பதன் மரூஉ. (கஎ)

கொந்து கமழ்ந்திடு குஞ்சியு மூவிரு
குலமணி மௌலிகளும்
கோகந கங்களொர் ஆறு மலர்ந்தன
குளிருந் திருமுகமுஞ்

சந்த மணங்கமழ் கந்தர மும்கிரி
தண்டிய திண்புயமும்
தனிஅயி லும்கர தலமும் இலங்கிய
சந்துறு நடமார்பும்

தொந்தி தருஞ்சிறு பண்டியும் மேலணி
சுந்தர அரைஞாணும்
துகிலும் பரிபுர பதமும் கொடுதுயர்
தொலையும் படிஅடியார்

சிந்தையின் நின்று நடம்புரி யுங்குக
செங்கோ சேங்கீரை
திருமலை அறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) கொந்து - கொத்து, பூங்கொத்து. குஞ்சி-ஆண் மயிர். கோகநகங்கள் - தாமரைகள். மலர்ந்தன - விரிந்தவை போல். தண்டிய - விலக்கிய. இலங்கிய சந்து - விளங்கிய அழகு. தொலையும்படி - கெடும்படி. (கஅ)

மகரக் கடலிற் கடுவிட முண்டவன்
வளையா வலியாலு
மாயக் காலுக் குடைபட் டுருளா
மணிமுடி பெறலாலும்

நிகரொப் புவமை இலாத சுதந்தர
நீவிளை யாடியநாள்
நெரிபட் டடிபட் டுன்ஞல் நிலைகுலை
யாதுவி ளங்கியதால்

தகரக் கருமைக் கோதைஅ ரம்பையர்
தயவுறு கொழுநருடன்
தடவட வரையினும் இவைபெரி தெனவே
தங்கி இருந்தேகுஞ்

சிகரிப் பண்பைத் திருநக ரதிபதி
செங்கோ செங்கீரை
திருமலை அறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) விடமுண்டவன்-சிவபெருமான். மாயக்காலுக்கு உடைபட்டு - மாயக்காலுக்குத் தோற்று. தகரம் - மயிர்ச்சாந்து. (கக)

காயொடு பூவொடு கனிஉறு மாவுங்
கண்டம்இ ரண்டாகக்
கண்டகர் நெஞ்சம் உலைந்துகு லைந்து
கலங்கி மலங்கிஅழப்

பேயொடு காளி நடஞ்செய உம்பர்
பிழைத்தோம் என்றுடப்
பேருல குய்ந்து சராசர கோடி
பிராணி தழைத்தாடத்

தாயொடு தமரும் இலாத அதிதன்
தழல்விழி வழிதோன்றித்
தண்டிய அண்டம் நிரம்பிய காலின்
தலைஒரு வாகனமாய்த்

தீயொடு நீரொடும் வரும்இடி ஏறே
செங்கோ செங்கீரை
திருமலை அறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) மா-மாமரவடிவினன் ஆன சூரபதுமன். உலைந்து-கெட்டு. மலங்கி - கலங்கி. உம்பர் - தேவர். தண்டிய அண்டர்-வருத்தமடைந்த தேவர்கள். இடியேறு - ஆண்இடி. (உ0)

௬. தாலப்பருவம்

[தொட்டிலிட்டுத் தாலாட்டும் பருவம்; ஏழாந்திங்களில் நிகழ்வது.]

பண்டைக் கொடிய தீவினையும்
பழிக்குங் குலமும் நானெனும் ஓர்
பகையும் தீர்ந்திட் டிம்மையிலே
பரிந்து மனது குழைந்துருகுந்

தொண்டைத் தொகையி னுடன்கூடித்
தொனிக்க இனிக்குந் திருப்புகழைச்
சொல்லித் துதிக்க நல்இயலாந்
தொலையா வாழ்வு கொடுத்தருளி

அண்டத் திறைவன் பொன்முடிக்கும்
அமலக் கமலன் மணிமுடிக்கும்
அமரர் முனிவர் தலைகளுக்கும்
அணியப் பணியக் கிடையாத

தண்டைப் பதத்தை எனக்களித்த
தலைவா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ.

(அ-ரை.) நான்எனும் - நான் என்று சொல்லப்படும் ஆணவம். இம்மை - இப் பிறப்பு. இனிக்கும் - தித்திக்கும். இயல் - இயல்பு, இலக்கணம். அண்டத்து இறைவன் - உலகத் தலைவன். அமலக்கமலன் - குற்றமற்ற தாமரையிலிருக்கும் நான்முகன். அணிய பணிய - சூடவும், வணங்கவும். தாமம் - ஒளி. (உக)

மையற் குறவர் குறத்தியர்கண்
மருளு மடம்போய்த் தெருளெய்த
மான்கள் பசியும் மனப்பயமும்
மறந்து சுரந்த மடிப்பாலைப்

பையப் பதுங்கும் புலிப்பிணவின்
பறழுக் கருத்திக் கொலைமறந்த
பாரப் புலிதன் முலைப்பாலைப்
பன்றிக் குருளைக் கினிதூட்டக்

கையில் கவணில் பதித்தமணிக்
கல்லும் உருகக் கிளிகள்தினை
கவரா திருந்து கசிந்துருகக்
கனிவாய் ஆலோ லம்புகலும்

தையற் குறத்தி மனம் உருக்குஞ்
சமர்த்தா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ.

(அ - ரை.) மையல் - மயக்கம். மருளும்மடம் - மயங்கும் அறியாமை. தெருள் - தெளிவு. சுரந்த - சொரிந்த. புலிப்பிணவு- பெண் புலி. பறழுக்கு அருத்தி - குட்டிக்கு ஊட்டி. குருளை - குட்டி. தினைகவராது - தினைக்கதிரைக் கொள்ளாமல். புகலும் - சொல்லும். வள்ளி நாச்சியார் திருமொழிமட்டிலா இனிமை வாய்ந்தது. கவணில் வைத்த மணிக்கல்லுருகும். தினைகவர வந்த கிளி கவராதிருக்கும். (௨௨)

நீடுங் கருணைத் திருவருளால்
நீதூ தனுப்ப விடைவாங்கி
நெடிய கடலைக் கடந்திலங்கை
நீரில் அழுந்தக் குதித்தவுணர்

கூடும் பதிம கேந்திரத்தின்
குணபால் காக்குங் கயமுகனைக்
கொன்று சயந்தன் சிறைச்சாலை
குறுகிக் குகஉன் வரவுரைத்துச்

சூடு மகுடச் சூரன்முன்போய்த்
தூது பகரச் சூரன் எதிர்
சொல்லச் சிற வல்லையிலோச்
சுடர்க்கோ புரத்தால் அயன்கொலுவைச்

சாடும் வீர வாகுதுணைத்
தமையா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ

(அ - ரை.) விடை வாங்கி - உத்தரவு பெற்று. பதி - ஊர். குணபால் - கீழ்திசை. கயமுகன் - யானைமுகன். சயந்திரன் - இந்திரன் மகன். சீற - கோபிக்க. (உரு)

செப்பா மோனப் பரமசுகச்
செங்கைக் கருநெல் லியங்கனியே
திருக்கார்த் திகைபார்ப் பதிமுலைப்பால்
தேக்கும் ஒருசெம் பொற்குடமே

கொப்பார் குழைச்சி குறத்திகொங்கைக்
குவட்டில் அணியுஞ் செம்மணியே
குளிருஞ் செழுங்கங் கையில்பிறந்த
கோமே தகமே கூர்வடிவேல்

அப்பா அரசே உமைமடந்தைக்
கருமைக் குருந்தே கண்மணியே
அமரர் விருந்தே வுலகினுயிர்
அனைத்தும் புரக்கும் அருமருந்தே

தப்பா விரதப் பெருமான்சந்
ததியே தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ.

(அ - ரை.) செப்பா - சொல்லமுடியாத. கரு - கரிய. தேக்கும் - நிறையும், தங்கும். கொப்பார் குழைச்சி - கொப்பணிந்த காதுடையவள். கோமேதகம் - நவமணிகளுள் ஒன்று. புரக்கும் - காக்கும். சந்ததி-தோன்றல். (உசா)

கன்னங் கரிய மால்இடத்தே
கலந்து விளங்குந் தாணுவின்மேல்
கண்ணில் உதித்தோர் ஆறுருவாய்க்
கால்மேலேறிக் குளம புகுந்து

மன்னும் உயிருக் குயிராகி
வடிவொன் ருகிப் பலமுகமாய்
வளர வயலுஞ் சோலையினும்
வாவிதோறும் விளையாடி

அன்னம் இருபால் இருக்கஇசைந்
தார்க்கும் வேலை நடத்திமகிழ்ந்
தன்பு புரிந்து பரிந்துபுரிந்
தடுத்தோர் பரவச் சூர்தடிந்துன்

தன்னைப் பொருவும் அனுமநதித்
தலைவா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ.

(அ - ரை.) தாணு - சிவன். மன்னும் உயிர் - நிலைபெற்ற உயிர்கள். ஆத்மா அழியாதது என்பது சித்தாந்தம். வாவி - குளம். பரிந்து புரிந்து - விரும்பிச் செய்து. பொருவும் - நிகர்க்கும். (உகு)

குமரன் சரணம் சரணமென்று
கூறிச் சுரர்கள் சரண்புகுதக்
கொடியோர் மனத்தில் பயம்புகுதக்
கொலையும் களவும் கெடிபுகுத

அமரர் உலகம் குடிபுகுத
அவுணர் பதியில் எரிபுகுத
அடையார் உயிர்கள் சொர்க்கமுடன்
அழல்வாய் நரகம் போய்ப்புகுதத்

துமித்த அலையா ழியில்அவுணர்
சோரிக் கடல்போய்ச் சுரந்துபுகத்
துங்க வீர வாகுசொன்ன
சொல்லுப் புகுதாச் சூரன்நெஞ்சில்

சமர வடிவேல் புகஎறிந்த
சதுரா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ.

(அ - ரை.) சரணமென்று - அடைக்கலமென்று. புகுத - புக. கெடி-அச்சம். எரி - நெருப்பு. அடையார் - பகைவர். அழல்வாய் - தீநிறைந்த. சமரம் - போர். (உசு)

வேறு

மதமலை துணைவா குறமகள் கணவா
வானோர் கோமானே
மலைமகள் புதல்வா அறுமுக முதல்வா
வாகா மேகாரா

பதபரி புரனே முகவசி கரனே
பாலா சீராளா
படைபொர அசையா ரணமுக விசையா
பாராள் சூரேறே

சிதமுறு குழகா அதிசய அழகா
தேனே பாலாறே
சிவகுல திலகா அவகுல கலகா
தேவே சேயோனே

சதமகன் மருகா திருமலை முருகா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனிஅயில் வலவா
தாலோ தாலேலோ.

(அ - ரை.) மதமலை-விநாயகன். மேகாரா-மயில்வாகனனே. ரணமுகம் - யுத்தகளம், போர்க்களம். சதமகன் - இந்திரன். சிதம்-சித்தம். (உள)

வேறு

இந்து நெடுஞ்சிலை சந்திர திலகம்
இரண்டும் உரிஞ்சிடவே
இந்துவொ டுஞ்சிறு தென்றல் வருந்தொறும்
இளகி நறுஞ்சேருய்க்

கொந்து கமழ்ந்து வழிந்ததை ஆவின்
குழுவிடும் எருவெனவே
கூடைகள் தோறும் எயிற்றியர் வாரிக்
குடில்மெழு கக்குறவர்

செந்தினை யோடு கருந்தினை அள்ளிச்
சிதறு புனங்கள்தொறுஞ்
செல்உகு நீரான் ஐவனம் விளையுஞ்
செய்தொறும் உரம் இடவே

சந்த மணங்கமழ் திருமலை முருகா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனிஅயில் வலவா
தாலோ தாலேலோ.

(அ - ரை.) இந்து நெடுஞ்சிலை - நெடிய சந்திரகாந்தக்கல். நறுஞ்சேறாய் - வாசனைக்குழம்பாய். ஆவின் - பசுவின். குழு - கூட்டம். புனம் - கொல்லை, தினைப்புனம். செல்உகு - முகில் சொரிகின்ற. ஐவனம் - மலைநெல். செய் - வயல். செல்வ வளமிக்க மாளிகைகளில் பதித்த நிலாக்கல்லும் நெற்றிப்பொட்டும் திங்கள் தோற்றம் கண்டு இளகி உருகிவிடும். அச்சேறு உரமாகி விடும். (உஅ)

தொண்டர் தொழுந்தொறும் இன்ப மிகுந்துதி
சொல்லிய நல்ஒலியும்
தும்புரு நாரதர் இங்கித வீணை
சுரந்திடும் ஏழிசையும்

அண்டர் அரம்பையர் மங்கல கீதம்
அறைந்திடு துழனிகளும்
அந்தர துந்துமி யும்குட முழவும்
அதிர்ந்திடும் ஓதைகளும்

மண்டிய வன்புடை முனிவர் சிவாகம
வகையும் சதுமறையும்
வாய்க்கும் புலவர் செவிக்கும் இனிக்க
வடித்த திருப்புகழின்

தண்டமி ழின்தொனி தருதிரு மலையா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனிஅயில் வலவா
தாலோ தாலேலோ.

(அ - ரை.) துதி - புகழ்ச்சி. இங்கிதம் - இனிமை, எழிசை:- குரல், துத்தம், கைக்கிளை, இளி, விளரி, உழை, தாரம். தழனி - ஓதை. மண்டியவன் - நெருங்கியவன். இனி மண்டி அவன் எனவும் பிரிக்கலாம். இனிக்க - இனிக்கும்படி. தொனி - குரல். (உக)

கங்குலும் மங்குலும் ஒருரு வாகிக்
கானில் நடந்ததெனுங்
காட்டெரு மைக்குலம் வேட்டுவ ரேனல்
கதிரை மிகப்பருகிக்

கொங்கவிழ் குவளை நறுஞ்சுனை நீர்கள்
குடித்து மதர்ப்புடனே
குகரக் குடுமி முழைக்குள் விடுத்த
குழக்கன் றைத்தேடிச்

செங்கண் மருண்டு கனைப்ப முலைப்பால்
சிந்தி வழிந்தோடிச்
சேரந னைந்து வெளுப்புற லாலும்
தெய்விக நீராலும்

சங்கரன் மலைநிக ருந்திரு மலையா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனிஅயில் வலவா
தாலோ தாலேலோ.

(அ - ரை.) கங்குல் - இரவு. மங்குல் - மேகம். ஏனல்- தினை சுனை - மலையிலுள்ள தடாகம். மதர்ப்பு - செழிப்பு. குகரம்-குகை முழை. குழக்கன்று - இளங்கன்று. சங்கரன் மலை - கைலாயம், வெள்ளிமலை. (கூ0)

---

௯. சப்பாணிப்பருவம்

[இருகை யொருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம்; இஃது ஒன்பதாந்திங்களில் நிகழ்வது.]

அடித்துணை நினைப்பவர் மனத்திருள் விளக்க
அனற்பூ டுதித்தசுடரே
அகத்தினின் மிகக்கிருபை செனித்தருள் கொடுக்கு
அப்பா இனிக்கும் அமுதே [மயில்

தொடிக்கைகள் சிவக்கம ழலைக்குரல் பிறக்கநிறை
சொற்பாக முற்றபுலவோர்
துதித்திடு புயக்கிரி துளக்குற இதழ்க்குலவு
துப்பூடு முத்தொளிரவே

மடப்பிடி நடைத்துடி இடைக்குட முலைக்குமரி
மட்டூறி நெய்த்தகுழலாள்
மதித்திரு முகத்தினள் குறச்சிறுமி மிக்கவடி
வப்பாவை மைக்கண் எனவே

தடத்தினில் முளைத்தகுவ ளைத்திரும லைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட அயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே.

(அ - ரை.) அடித்துணை - இரண்டடிகள். அனற்பூடு - நெருப்பாகிய பூண்டு. செனித்து - பிறந்து. துப்பு - பவளம். துடி - உடுக்கை. மட்டூறி - தேன்பெருகி. நெய்த்த - நெய் தடவிய. குழல் - கூந்தல். மதி - திங்கள். (௩௧)

வேய்தொறும் எயிற்றியர்கள் தொட்டில்கட் டிச்சிகியின்
மென்பீலி யுள்விரித்து
வெம்முலை அருத்திவாய் முத்தாடி மதலைகளை
மெல்லஅதன் மேல்வளர்த்தி

நேயமுறு கொழுநருடன் மலைவிட் டிறங்கிவளர்
நீள்சோலை யில்புணர்ந்து
நினைவழிய உடைகுலைய மனதுபர வசம்உருகி
நித்திரை தெளிந்துவரும்உன்

தூயபூ ரணமதி தவழ்ந்தேறி ஏறியத்
தொட்டிலின் கிட்டஅணுகித்
துண்ணென விழித்துக் குறச்சிறுர் மழலைமொழி
சொல்லிவிம் மிப்பொருமியே

தாய்முகம் எனக்கண்டு மகிழ்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட அயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே.

(அ - ரை.) வேய்தொறும்-மூங்கில்கள்தோறும். எயிற்றியர் - வேடு விச்சிகள். சிகி-மயில். பீலி-தோகை. வெம்முலை அருத்தி-விருப்பப்படும் முலைப்பாலூட்டி. நேயம் - அன்பு. கொழுநர் - கணவர். நினைவு - எண்ணம், கருத்து. பரவசம் - தன்வசமிழத்தல். பூரணமதி - நிறைதிங்கள். பொருமி - எங்கி. விதிர்த்தல்-அசைத்தல். (கஉ)

இருநில வரம்பையொரு குடைதனில் அமைத்தர
சியைந்திடு பெருஞ்செல்வமும்
இயலாதி முத்தமிழ்ச் செஞ்சொல்முத லானபதி
னெட்டுவகை யில்பாடவும்

மருமலர் உகுத்துலவை குலவுதரு விற்சசிதன்
வனமுலை திளைத்த மார்பும்
வாலமா மதிசூடி பாலலோ சனம்உரு
மன்மதன் விரும்பும் அழகும்

அருமறை விரித்துரைசெய் சதுமுகமும் வெற்றிபுனை
ஐம்படை தரித்தகரமும்
அம்புயக் கண்களும் பரமபத முத்தியுடன்
அத்தனையும அன்பர் பெறவே

தருபனிரு கட்கருணை புரிதிரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே.

(அ - ரை.) வரம்பை - எல்லையை. இயைந்திடு - பொருந்தும். இயல் - இலக்கணம். உலவை - உலர்ந்த தன்மை. சசி - இந்திராணி. வால - வெள்ளிய. பாலலோசனம் - நெற்றிக்கண். ஐம்படை - பஞ்சாயுதம், வில், வாள், சங்கு, சக்கரம், தண்டு என்பவை. அம்புயக்கண் - தாமரைக்கண். குக முருக, அன்பர் மனக் குகையுள் தங்குபவனே! (௫௫)

வண்டுமொய்த் திலகுவெண் கேதகைப் பூவினை
மடப்பெடைக் குருகிதெனவே
வண்மைப் பெருஞ்சேவ லங்குருகு கண்டிரு
மணிச்சிறகி னுல்அணைத்துக்

கொண்டுதுயி லப்பேடு பார்த்துப் பதைத்துக்
கொதித்துக் கொதித்துவிம்மிக்
கோபமுற் றங்கங் குழைந்தேகி உம்பர்தங்
குளிர்பொதும் பரின்ஒதுங்க

அண்டருல கத்துள அரம்பையரும் ஆடவரும்
அதிசயம் இதென்றுகாண
அச்சேவல் பின்தொடர்ந் தோடியூ டற்குறைகள்
அகலப் புணர்ந்து மீளுந்

தண்டலைப் பண்பைப் பதித்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிபட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே.

(அ - ரை) கேதகைப்பூ - தாழம்பூ. சேவலங்குருகு - ஆண் பறவை. உம்பர் - தேவர், மேலிடம். பொதும்பர் - பொழில். ஊடற் குறை - பிணங்குதலால் ஆன குற்றங்குறைகள். தண்டலை- சோலை, பொழில். (௫௬)

கந்தமிகு முண்டகக் கண்ணனும் கருணைஎம்
கண்ணனும் உடற்கண்ணனும்
கதிதனை வழங்குமுன் திருமுன்பு வந்துசெங்
கதிர்வேல் புகழ்ந்திரந்து

சுந்தரக் குங்குமக் கொங்கைஒரு மங்கைநஞ்
சுதையைவேட் டருளுகெனவே
சுடர்முடி துளக்கிவெகு மகிழ்வுடன் நகைத்தருள்
சுரந்துள மிசைந்துமறுநாள்

அந்தரத் தமரர்முசு குந்தன்முதல் இம்பர்கள்
அருந்தவர் பெருந்திசையினோர்
அணிமணக் கோலத்தின் அதிசயம் கண்டுய்ய
அப்பரங் குன்றின்மிசையே

தந்தியை மணந்தருவ ளைத்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே.

(அ - ரை.) கந்தம் - மணம். முண்டகம் - தாமரை. எண் கண்ணன் - பிரமன். உடற்கண்ணன் - மெய்யெல்லாங் கண்கள் அமைந்த இந்திரன். கதி - மோட்சம், நன்னிலை. வேட்டு-விரும்பி. துளக்கி - அசைத்து. அந்தரம் - விண், ஆகாயம். முசுகுந்தன் - முசுகுந்த சக்கரவர்த்தி, இந்திரனுக்குப் போரிலுதவிபுரிந்து பின் நெடுநாள் நித்திரை பங்கமில்லாதிருந்தவன். இம்பர்கள் - இவ்வுலகத்துள்ளவர்கள். தந்தி - தெய்வயானை. தெய்வயானை அம்மையார் திருமணம் திருப்பரங்குன்றத்து விண்ணவர், முசுகுந்தர், மண்ணவர், அருந்தவர், புலக்காவலர் வியப்புற நிகழ்ந்தது. (௬௫)

வேறு

வம்பொன்றுஞ் சந்தொடு குரவு
மணத்த புயக்காரா
மஞ்சும்துஞ் சுங்குல கிரியை
மடித்த வயிற்காரா

அம்பஞ்சுங் கண்பெறு குறமகள்
அத்தி நயக்காரா
அன்பும்பண் புங்கொழு தொழும்அடி
யற்கெளி மைக்காரா

செம்பைம்பொன் தந்திடு மொழிதிகழ்
சித்ர மயிற்காரா
செம்பொன்கொஞ் சுந்திரு மலைவளர்
செக்கர் நிறக்காரா

கும்பன்கண் டின்புறு குருபர
கொட்டுக சப்பாணி
குன்றெங்குந் தங்குஞ் சிவசுத
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) வம்பு ஒன்றும் - மணம் பொருந்திய. சந்து - சந்தனம். மஞ்சு துஞ்சும் - மேகம் தங்கும். அம்பு அஞ்சும் - அம்பானது பயப்படும். அத்தி - யானை. நயக்காரா - விரும்புதலைச் செய்கின்றவனே!, சித்ர - அழகிய. செக்கர் - சிவந்த. (௩சு)

வேறு

துட்ட அரக்கர்கள் பட்ட பிணக்குவை
சுற்றுக டற்பூமி
தொக்கு மறைக்கவி ழிக்கலை லக்கொடு
சுட்டட லைப்பூதி

இட்டுல கத்துள சட்சம யத்தரும்
இச்சம யத்தாக
இப்படி யுத்தம் விளைத்த களத்தில்
எதிர்த்து மறுத்தோடி

நெட்டை மரத்தியல் பைக்கொ டுரத்தொடு
நிற்கும தச்சூரன்
நெட்டுரு வத்துடல் பட்டுரு வத்தசை
நெய்த்தவு டற்சோரி

கொட்ட அயிற்படை தொட்ட திறற்குக
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) பிணக்குவை - பிணக்குவியல். கனலைக்கொடு நெருப்பைக் கொண்டு. பூதி - நீறு. சட்சமயத்தர் - அறுவகைச் சமயத்தவர். உரம் - பலம். சோரி - இரத்தம். (௩௭)

அளவில் அரக்கர்கள் கதறு தொனிக்குரல்
அசனி இடித்திடவே
அங்கவர் செம்மணி யணிமுடி சிந்தி
யழற்பொலி மின்னோடே

இளமதி ஒத்தில கெயிறெனு மாம்பிமண்
எங்கும் உறச்சோரி
இந்திர கோப மலிந்திட வேபுவி
யில்அவிர் வில்லிடவும்

வளமை ஒழித்திட அழுத அரக்கியர்
மண்டூ கம்போல
வானுல கென்னும் வயிற்பயிர் உய்ந்திட
வன்கூ ரன்கால்வாய்

குளமுடை யச்சர மழைமொழி புயலே
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) இந்திரவில் - வானவில். வில்இட - ஒளிவீச. மண்டூகம் - தவளை. சரம் - அம்பு. குக்குடம் - கோழி. துவசம் - கொடி. அசனி - இடி. இலகு - விளங்கு. (௩௮)

துடித்த தரத்தைய துக்கியு றுக்கிய
சுழல்கண் தீயவுணர்
சோரிகு டைந்துகு ளித்திகல் வெற்பைத்
துண்ணென நீறிட்டுப்

பிடித்தக ரத்திரி சூலிஇ டாகினி
பேழ்வாய் வெம்பூதம்
பேய்நரி கழுகுப ருந்துக ருங்கொடி
பெரிய விருந்தாக

வடித்தஉ வர்த்ததி பாகொடுபால் நெய்
மதுப்புனல் ஏழ்கடலும்
மாறுப டாமல் அளாவிநி ணத்தொடு
மாவடு வுங்கூட்டிக்

குடித்து மதத்தஅ யிற்படை யானே
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) அதரம் - உதடு அதக்கி - மென்று. சுழல்கண் - சுழல்கின்ற கண்கள். இடாகினி - காளிஏவல் செய்வோள், பிணந் தின்னும் பேய். கருங்கொடி - கருங்காகம். மது - தேன், கள். நிணம் - கொழுப்பு. (௩௯)

நெஞ்சுகு ழைந்துகு ளிர்ந்தப கீரதி
நீராட் டிப்போற்றி
நீறொடு திலகமொர் ஆறுசெ ழும்பிறை
நெற்றிதொ றுந்தீட்டி

அஞ்சனம் அன்பொடு கண்களில் எழுதியோர்
ஐம்படை யும்பூட்டி
அரைவடம் ஆழிசி லம்புகு தம்பைஅ
ணிந்துமு கம்பார்த்து

வஞ்சிதி கம்பரி கொங்கைசு ரந்தும
கிழ்ந்தும கிழ்ந்தூட்டி
வாய்தொறு முத்தம டிக்குள் இருத்திமென்
மழலைச் சொற்கேட்டுக்

கொஞ்சிம கிழ்ந்தருள் பிள்ளைப் பெருமாள்
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) பகீரதி - கங்கை. நீறுதிலகம் - திருநீறும் பொட்டும். அஞ்சனம் - மை. குதம்பை - காதணி. திகம்பரி - திக்கை ஆடையாக உடையவள். மென்மழலைச் சொல் - மென்மையான குதலைமொழி. பிள்ளைப் பெருமாள் - இளைய பெருமானே! (௪0)

ரு. முத்தப்பருவம்

[இது பதினொன்றாந் திங்களில் நிகழ்வது.]

நித்தங் குவளைச் சுனை ஆடி
நெடுஞ்சோ லையிற்பூக் கொய்துகல்லும்
நெகிழச் சிலம்பின் எதிர்கூவி
நெடிய வேங்கை நிழல்மேவி

அத்தஞ் சிவக்க அம்மனைபந்
தாடிக் கழங்கும் எடுத்தாடி
அரத்த மணிமின் போலூசல்
ஆடி ஆடி உடலிளைத்துச்

சித்த மதனுக் கிளையாத
செவ்வாய்க் கருங்கண் எயிற்றியர்கள்
சிற்றில் விளைத்து விளையாடத்
திரிகண் மதமால் கரிக்கோடு

முத்தங் கொடுக்குங் குறிஞ்சிகில
முதல்வா முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

(அ - ரை.) குவளைச்சுனை-குவளை மலர்க்குளம். சிலம்பு-மலை. அத்தம் - கை. கழங்கு - கழற்சிக்காய். அரத்தமணி - சிவந்தமணி. செவ்வாய்க் கருங்கண் : முரண்தொடை. திரிகண் மதமால் கரிக்கோடு - மூன்று கண்களையும் முகத்தையுமுடைய யானைமுகக் கடவுள் கொம்பால். (௪௧)

அழிந்து புவனம் ஒழிந்திடினும்
அழியாத் தோணி புரத்தின்மறை
யவர்கள் குலத்தி னுதித்தரனே
டம்மை தோன்றி அளித்தவள்ளச்

செழுந்தண் முலைப்பால் குடித்துமுத்தின்
சிவிகை யேறி மதுரையில் போய்ச்
செழியன் பிணியுஞ் சமண்பகையுந்
தேவி துயருந் தீர்த்தருளி

வழிந்து நறுந்தேன் உகுவனபோல்
மதுரங் கனிந்து கடைதுடிக்க
வடித்துத் தெளிந்த செந்தமிழ்த்தே
வாரப் பாடல் சிவன்கேட்க
மொழிந்து சிவந்த கனிவாய்ச்சண்
முகனே முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

(அ - ரை) புவனம் - உலகம். தோணி புரம் - சீகாழி. அம்மை - உமையம்மை. சிவிகை - பல்லக்கு. செழியன் - பாண்டியன். தேவி-மங்கையர்க்கரசி. மதுரம் - இனிமை. இப் பாட்டில் முருகனே திருஞானசம்பந்தராகத் தோன்றித் தேவாரம் பாடியவர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. (௪௨)

தலைமுத் தொழிலும் இயற்றும்அயன்
தனிமால் ஈசன் எனுமூவர்
தால மிசைப்பொன் உரத்தின்மிசைத்
தலையின் மிசையின் தயவாகக்
கலைமுத் தமிழ்வா ணியைத்திருவைக்
கங்கை தனையுந் தரித்ததல்லால்
காத லுடன்வேட் டகத்தில் இன்னங்
கருத்து நாணு திருப்பதற்கே
சிலைமுத் துதிரப் பூவாளி
செலுத்து மதனும் இரதியுமே
செவ்வாய் முத்தம் இடும்போது
சேர்த்து நெருங்கும் அவர்முடிநேர்
முலைமுத் தழுந்த வள்ளிபுணர்
மோகா முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

(அ - ரை.) தலைமுத் தொழிலும் - முதன்மையான படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழிலும். தாலமிசை -

காவில். வேட்டகம் - மணந்த வீடு. சிலை - வில், (கரும்பு). பூவாளி-பூஅம்பு. மோகா - மோகம் உடையவனே! (௩௩)

தகட்டிற் சிறந்த இதழ்க்கமலத்
தடத்தில் குளத்தில் தண்பணையில்
தழங்குந் துழனிப் பெருமதகில்
சயிலப் புதுநீர் தத்துதொறும்

பகட்டு முரட்டுப் பருவாளை
பணைத்துப் பாய்ந்து செழும்பலவின்
பழத்தைத் தகர்த்து மாங்கனியின்
படுவைச் சிதறிப் பசியமுகில்

அகட்டைக் கிழிக்க முகில்வெருவி
அழுகஞ் சொரிந்து மடவார்கள்
அளகத் தழுகுக் குடைந்தனபோல்
அங்கம் வெளிறி அணிமாட

முகட்டிற் கிடக்கும் பண்பைநகர்
முதல்வா முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

(அ - ரை.) பணை-தாழ்ந்த இடம் (வயல்). தழங்கும் துழனி - முழங்கும் ஓசை. சைலம் - மலை. தத்துதோறும் - பாயுந்தோறும். முகில் அகடு - மேகவயிறு. அங்கம் வெளிறி - உடல் வெளுத்து. அளகம் - கூந்தல். (௩௪)

தொழுது புலவர் புகழ்ந்ததண்டைத்
துணைத்தா மரையி லிருமுத்தந்
தூய கணைக்கான் முழந்தாள்செந்
துடையி லிடையி லேழுமுத்தம்

எழுத அரிய தொந்தியுந்தி
இலங்கு மார்பின் மூன்றுமுத்த
மேய்ந்த மரங்கந் தரம்புயத்தில்
இருபத் தைந்து திருமுத்தம்

அழுது சிரித்து மழலைசொல்லு
மருமைத் துகிரி லாறுமுத்தம்
அழகு கதுப்புக் கண்குடுமி
அனைத்தும் அந்தப் படியுடல

முழுதும் உமையாள் முத்தம்இடு
முத்தே முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

(அ - ரை.) துணை - இரண்டு. தொந்தி - அடிவயிறு. துகிர்-பவளம் (உதடு). கதுப்பு - கன்னம். (சரு)

வேலைப் புனலைக் கலக்கிஎட்டு
வெற்பைப் பிடுங்கிப் பந்தாடி
மேருக் குடுமி திருகிஉம்பர்
வேந்து தனையுங் கொன்றெழுப்பித்

தூலத் துருவம் எடுத்தயனைத்
தொடரிட் டிரங்கிப் புரந்துசிவத்
துரகம் அனைத்தும் விளையாட்டால்
தொலைத்துத் துணைவ ருடன்மேவிக்

கோலச் சடிலத் தரன்செவியின்
குலவண் டினங்கள் அருந்துதற்குக்
குழந்தை வயசில் பெருமதியால்
குமுதம் நெகிழ்த்துப் பிரணவத்தின்

மூலச் செழுந்தேன் உகுத்தருளும்
மூர்த்தி முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

(அ - ரை.) வேலைப் புனல் - கடல்நீர். உம்பர்வேந்து - இந்திரன். தொடரிட்டு - விலங்கிட்டு. துரகம் - குதிரை. குமுதம் - ஆம்பல் போன்ற வாய். இந்திரனைக்கொன்றெழுப்பு மியைபு எண்ணின் அந்தமில் ஆங்காரத்தை அடக்கல் ஆகும். (சசு)

வேறு

திருந கர்ப்பண் பையில் இருக்குஞ்
செழியன் முத்தம் தருகவே
தெருள்கொ டுத்திங் கெனே உருக்குஞ்
சிறுவன் முத்தம் தருகவே

கருதி மொய்க்குஞ் சமண் அழிக்குங்
களிறு முத்தம் தருகவே
களிறு னுக்கும் குறம கட்கும்
கணவன் முத்தந் தருகவே

பருவ ரற்கங் குலைஒ ழிக்கும்
பரிதி முத்தந் தருகவே
பரம னுக்கும் பொருளு ரைக்கும்
பவள முத்தந் தருகவே

தருப ரைக்கும் புனல்ம கட்குந்
தனையன் முத்தம் தருகவே
சதும றைக்குந் திரும லைக்குந்
தலைவன் முத்தம் தருகவே.

(அ - ரை.) பண்பை - பண்பொழில் செழியன்-பாண்டியன். சமண் அழிகுங்களிறு - சமண மதத்தை அழித்த யானை போன்றவனே. களிறினுக்கும் - தேவ யானைக்கும். பரை - பராசக்தி, பார்வதி. புனல்மகளைக் கங்கை என்னும் புராணக் கூற்றுமட்டுமன்றிச் சலமகள் எனும் பொருளால் நடப்பாற்றலாகிய திரோதான சத்தி என்றலுமொன்று. (௪௭)

தொந்த மிட்டின் பங்கு திக்குந்
தொண்ட சித்தம குளிரவே
சுந்த ரப்பொங் கங்கொ டுக்குந்
தொந்தி வட்டஞ் சரியவே

கெந்த மொய்க்குஞ் செம்ப தத்தின்
கிண்கி ணிப்பொன் குலவவே
கிஞ்சு கத்தின் சந்த்ரன் ஒக்குங்
கிம்பு ரிக்கொம் பொளிரவே

சிந்து ரத்தின் செஞ்சி வப்புந்
திண்செ விக்குந் திகழவே
செங்க னிக்கன் பும்க ளிப்பும்
சிந்தை முற்றும் பெருகவே

தந்தை சுற்றுந் தும்பி மெய்ச்சுந்
தம்பி முத்தம் தருகவே
சதும றைக்கும் திரும லைக்கும்
தலைவன் முத்தம் தருகவே.

(அ - ரை.) சித்தம்-மனம். பொங்கம் - பொலிவு. குலவ - விளங்க. கிஞ்சுகம் - கிளி. தந்தை சுற்றும் தும்பி - தந்தையாகிய இறைவனை வலம் வந்த யானைமுகன். (சஅ)

வேறு

சினவாள் அரிக்குருளை அனையாய் எனக்குனது
திருவாயின் முத்தமருளே
சிதவா ரணக்கடவுள் மருகா எனக்குனது
திருவாயின் முத்தமருளே

மனமாலை யைப்பொடிசெய் தருள்வாய் எனக்குனது
மணிவாயின் முத்தமருளே
வரதா குறச்சிறுமி விரகா வெனக்குனது
மணிவாயின் முத்தமருளே

சுனைவா சமைக்குவளை யணிவாய் எனக்குனது
துகிர்வாயின் முத்தமருளே
துடியாய் நடத்துதகர் உடையாய்
எனக்குனது துவர்வாயின் முத்தமருளே

கனகா சலக்குமரி குமரா எனக்குனது
கனிவாயின் முத்தமருளே
கனமேக மொய்த்ததிரு மலையாய் எனக்குனது
கனிவாயின் முத்தமருளே.

(அ - ரை.) சின வாள் அரி குருளை - கோபம் மிகுந்த ஒளி மிக்க சிங்கத்தின் குட்டி. சிவாரணம்-வெள்ளை யானை. துடியாய் -

நடுக்காய். தகர் - ஆடு. கனகாசலம் - பொன்மலை. கனமேகம் - மிகுந்த மேகம், மீமிசைமொழி. (சக)

சலியாது பற்பபத நடையாய் வனத்தின் இடை
தனியே தனித்துலவியே
தடிமேல் நடக்குமொரு முதியோன் எனக்குறவர்
தருமான் இடத்தணுகியே

மலியா தரத்திெனாடு மயல்தீர்வ தற்குமொரு
வழிநீ யுரைத்திடெனவே
வகைபேசி அத்திமுகன் வரவே நினைத்தவனை
மறைவாய் மணந்தகலவே

புலிபோன் மலைக்குறவர் பிறகே தொடுத்தும்எதிர்
பொரவே செயித்தவர்முனே
பொருமா மயிற்பரியின் அறுமா முகத்திெனாடு
பொலிவாய் உதித்தருளியே

கலியாண இட்டமுறு முருகா எனக்குனது
கனிவாயின் முத்தமருளே
கனமேக மொய்த்ததிரு மலையாய் எனக்குனது
கனிவாயின் முத்தமருளே.

(அ - ரை.) பற்ப பதம் - தாமரை மலரடி. தடி-கம்பு. அத்தி முகன் - யானைமுகன். பொரு - போர் செய்ய. இட்டமுறு - பிரிய முற்ற. (ருo)

௬. வாரானைப்பருவம்

[சிறு நடையெய்தும் பருவம். பதின்மூன்றாந் திங்களில் நிகழ்வது.]

தந்தா வளமுன் அழைப்பமனஞ்
சற்றுந் தரியா தெழுந்துகுல்லைத்
தாமம் சரிய உடைசரியச்
சக்ரா யுதத்தை முன்நடத்திச்

செந்தா மரைப்பெண் புவிமடந்தை
திகைப்போ டெழுந்து பின்தொடரச்
சேடன் முதுகும் அவன்மனமும்
திருப்பாற் கடலும் வெளிறிவெஃகப்

பைந்தார்க் கருடன் கடைக்கண் அருள்
பார்த்து நேரே பறந்துவரப்
பாரக் கொடிய முதலைவதைப்
படவும் பாதம் தரைப்படவும்

வந்தான் மருகா முருகாசெம்
மலையே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) தந்தா வளம் - கசேந்திரன் என்னும் யானை. குல்லை-துளசி. தாமம் - மாலை. திகைப்பு - பிரமிப்பு, தத்தளிப்பு. சேடன் - ஆதிசேடன். வெளிறி வெஃக - வெளுத்து விரும்ப. முதலைவதைபட - முதலை கொல்லப்பட. சரதம் - உண்மை. (௯௧)

வெண்சா மரைபோல் பலவிதமாய்
விரிந்த மனத்தின் கருவியெல்லாம்
வெவ்வே றுகப் புகுத்தறிந்த
விநயம் அறிந்தங் குனையறிந்து

கண்சா ரெழுக விம்மிவிம்மிக்
கரைய அழுது கசிந்துருகிக்
களித்துச் சிரித்துக் குதித்தாடிக்
கவிஞைக் குளறத் துதித்திடுவோர்

எண்சாண் உடம்பும் இனிக்கமகிழ்ந்
தெங்கும் பெருகி அலைமோதி
இரண்டு வினையின் கரைகள்கடந்
தெழுந்த பரமா னந்தம்எனும்

வண்சா கரத்தில் உதித்தசுதை
மருந்தே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே

(அ - ரை.) விரயம் - வஞ்சம், மரியாதை. சாறு-நீர். இரண்டு வினைகள் - நல்வினை தீவினைகள். வள்சாகரம் - வளவிய கடல். சுதை - சாந்து, வெண்மை. (இஉ)

சினந்தான் மிகுந்து பொருஞ்சூரன்
தேவி தாலி திப்புகுதத்
திறல்சேர் அவுணர் மனைவியர்கள்
திருநூல் இழந்து கைமை எய்த

அனந்தான் வெளிற நடைபயிலும்
அழகு கசியுங் கலைமகளும்
அரம்பை மாரும் செழுந்திருவும்
அணியுந் திருமங் கலந்தளைப்பக்

கனந்தாழ் குடுமி மலையரசன்
கரநீர் வார்க்க மேனைகண்டு
களிக்க அமரர் துதிக்கஉமை
கழுத்தில் ஒருமங் கலநாணை

வணந்தாள் இலகு திருநுதற்கண்
மணியே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) சூரன்தேவி - பதுமகோமளை. திருநூல் - மங்கல நாண், தாலி. கைமை-விதவைத் தன்மை. அனம்-அன்னப் பறவை. கனம்-மேகம். மலை அரசன்-இமவான். மேனை - இமவான் மனைவி.

வனைந்தான் - சூடின பரமசிவன். திருநுதற் கண்மணியே-அழகிய நெற்றிக் கண்ணில் தோன்றிய மாணிக்கமே! (ருஈ)

அயல்சூழ் நாரை கணைக்கால்கண்
டணுகி அணுகிப் பின்தொடர
அன்னந் தோற்க நடந்துகளை
அகழ்ந்தே உறுப்பின் பகைதீர்த்துப்

புயல்சூழ் மலைபோல் முலைகள்தொறும்
பூட்டு நீல வடம்புரளப்
பொன்னங் கொடிபோல் ஒல்கி ஒல்கிப்
பொருந்து மருத நிலம்குலவுங்

கயல்சூழ் விழியின் கடைசியர்கள்
கருத்திற் புலவி தவிரஎன்று
கருகி அவர்கள் புறந்தாளைக்
கமடம் இதென மள்ளர்பற்றும்

வயல்சூழ் பண்ணைத் திருநகரின்
வாழ்வே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) களை அகழ்ந்து-களைபிடுங்கி. நீலவடம்-நீலமாலை. ஒல்கி - அசைந்து. கடைசியர்கள் - உழத்தியர்கள். புலவி-ஊடல். கமடம் - ஆமை; இது பெண்கள் புறஅடிக்குவமை. (ருச)

அனையுங் கயிலைப் பெருமானும்
அங்காப் புடனே மார்பிலெடுத்
தணியச் சமைத்த பதக்கமென
அமரர் முனிவர் அதிசயித்து

நினையும் படிக்கு விளையாட்டு
நிகழ்ச்சி புரிந்து மேருஎனும்
நெகிழ்ந்த பசும்பொன் மலைமீது
நேசத் துணைவர் இலக்கரொடு

முனையும் கனிவும் பெறுவீர
மொய்ம்பன் முதலோன் பதுபேரும்
முதிரு நவமா மணிபோல
முயன்று புடைசூழ்ந் திலங்க அங்கே

வனையு நடுநா யகமணிபோல்
வயங்கும் பெருமாள் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) அங்காப்புடன் - வாய்திறத்தலுடன். இலக்கர் - இலட்சம் பேர். வீரமொய்ம்பன் - வீரவாகு. வயங்கும் - விளங்கும்.
(ருரு)

தோயாத் துகிலும் அரைவடமும்
சுற்ற வருக வருகவே
சுரந்து வடியுங் கடைவாய்நீ
துடைக்க வருக வருகவே

ஆயாய் ஈன்ற கங்கைநன்னீர்
ஆட்ட வருக வருகவே
அருமைப் பதம்என் கண்ணிலெடுத்
தணைக்க வருக வருகவே

வீயா தொழுகுந் திருமுலைப்பால்
மிசைய வருக வருகவே
வீணை தெவிட்ட மழலைமொழி
விள்ள வருக வருகவே

வாயால் எனக்கோ ராணிமுத்தம்
வழங்க வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) தோயாத - நனைக்கப்படாத. துகில் - ஆடை. ஆயாய் - தாயாக. நீராட்ட - குளிப்பாட்ட. வீயாது - கெடாமல். மிசைய - உண்ண. விள்ள - சொல்ல. ஆணி முத்தம் - ஆணித்தரமான முத்தம்.
(ருசு)

முதிருங் கலைவா ணியும்தமிழ்மா
முனியோ டருண கிரிமுதலோர்
மொழியுங் கவிகொள் செவியால்என்
மோட்டுச் சிறுசொற் கேட்பதுபோல்

கதிர்கொள் வடிவேல் ஏந்தியசெங்
கையில் ஒருசெங் கோல்வாங்கிக்
கடம்பு புனைந்த திருப்புயத்திற்
காட்டு வேம்புந் தரித்தருளி

அதிருங் குரற்சே வலைஉயர்த்த
வாண்மைக் கொருமீன் கொடிஉயர்த்த
தண்ட முழுதுந் தானாகி
ஐந்து தொழிலுஞ் செய்தவனோர்

மதுரை யரசு புரிந்தஉக்ர
வழுதி வருக வருகவே
வரதச் சாதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) தமிழ் மாமுனி - தமிழாசிரியான அகத்திய முனிவன். கலைவாணி - நாமகள். மோட்டு - முரட்டுத்தனமான. கடகம் புனைந்த - காப்பணிந்த. வேம்பு - வேப்பமாலை. மீன்கொடி- மீன் எழுதிய கொடி. ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற தொழில்கள். உக்ரவழுதி-உக்கிர பாண்டியன். (கூஎ)

எதிரும் புலவன் வில்லிதொழ
எந்தை உனக்கந் தாதிசொல்லி
ஏழைப் புலவர் செவிகுருத்தோ
டெறியுங் கருவி பறித்தெறிந்தே

அதிருங் கடல்சூழ் பெரும்புவியில்
அறிந்தார் அறியார் இரண்டும் இல்லார்
ஆரு மெனைப்போல் உனைத்துதிக்க
அளித்த அருண கிரிநாதன்

உதிருங் கனியை நறும்பாகில்
உடைத்துக் கலந்து தேனைவடித்
தூற்றி யமுதின் உடன்கூட்டி
ஒக்கக் குழைத்த ருசிபிறந்து

மதுரங் கனிந்த திருப்புகழ்ப்பா
மாலை புனைந்தான் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) வில்லி - வில்லிபுத்தூராழ்வார். எறியும் கருவி - வீசிய அரிவாள். பாகு - சர்க்கரைப்பாகு; திருப்புகழ்ப் பாடலின் இயல்பு உயர்த்திக் கூறப்படுவது காண்க. (௰அ)

நாரி ஒருத்திக் கிடப்பாகம்
நல்கும் பெருமான் நுதல்விழியில்
நண்ணும் பொறியைப் பவனன்அங்கி
நடுங்கிச் சுமந்து கங்கையென்னும்

வேரிப் புனலில் புகுத்தஅவள்
வெம்பிப் பயந்து சரவணத்தின்
மீதில் இடமூ விருகுழவி
விரைந்து பிறந்தங் கழுதுவிம்மி

மூரி நெருப்பின் உடன்மடவார்
முலையுண் டுறங்கி எழுந்திருந்து
முளரிப் பூவில் தவழ்ந்திடஐ
முகத்தோ னுடன்வந் துமைகரத்தால்

வாரி அணைக்கத் திரண்டதிரு
வடிவத் தொருவன் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

(அ - ரை.) நாரி - நாண். பவனன் - காற்று. அங்கி-நெருப்பு. வேரி - வாசனை வெம்பி - வெதும்பி. மூவிரு குழவி - ஆறு குழந்தை. மூரி - வலிமை, பெருமை. கரத்தால் - கையால். (௰௯)

வேறு

பகைநிசி சரர்கள் மனதையும் இனிது
பருகிய அழகன் வருகவே
பரிபுரம் அதிர நடைபயில் கமல
பதமத களிறு வருகவே

மொகுமொகு மொகென நகைமணி கதற
முனிதகர் கடவி வருகவே
முருகவிழ் குடுமி அவிழ்வது அணைய
முலைதர வருக வருகவே

அகமெனு முளரி நறவொடு மலர
அருள்வெயில் இரவி வருகவே
அரனுமை மடிபொன் உரமிசை தவழும்
அறுமுக மதலை வருகவே

மகபதி முடியில் இலகிய சரணஎன்
மனமிசை புனைய வருகவே
மணமலி குவளை தருதிரு மலையின்
வரும்ஒரு குழவி வருகவே.

(அ - ரை.) இகல் - பகை. பரிபுரம் - சிலம்பு தகர்கடவி - ஆட்டைச் செலுத்தி. நாரத முனிவர் வேள்வியில் தோன்றியது இத்தகர். அகம்-மனம். அருள்-இரக்கம். உரமிசை-மார்பின்மேல். மகபதி-இந்திரன். மணமலி - மணம் நிறைந்த. (சுo)

எ. அம்புலிப்பருவம்

[முருகனுடன் கூட விளையாடச் சந்திரனைத் தாதியர் அழைத்தல். பதினைந்தாந் திங்களில் நிகழ்வது.]

கலையேறி மேலேறி வந்திலகு வாய்இவன்
கலையேறி மேலேறினான்
காமனுக் கேகவிகை யாய்விரிந் தாய்இவன்
காமனுக் கேகவிகையான்

நிலையாத கோட்டைகொண் டோடிவரு வாய்இவன்
நிசிசரர்கள் கோட்டைகொண்டான்
நீடுகுவ ளைக்குரிமை யாகிவரு வாய்இவன்
நித்தமொரு குவளைபுனைவான்

தொலையாத வேலையூ டுருவிவிடு வாய்இவன்
சுடர்வேலை உருவிவிடுவான்
சொல்லில்இவ னுக்குவமை யாரும்இலை நீசிறிது
தொழில் உவமை பெற்றதாலே

அலைஆழி யில்துயில்கொள் அரியருமை மருகனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) கலை - (1) அமுதகலை (2) கல்வி. காமனுக்கு - மன்மதனுக்கு. கவிகை-குடை. காமனுக்கு-இந்திரனுக்கு. கவிகையாம் - கவிகின்ற கையாம். கோட்டை - (1) பரிவேடம் (2) மதில். குவளைக்கு உரிமையாகி - ஆம்பலுக்கு நாயகனாய். ஒரு குவளை - ஒப்பற்ற குவளை மலர். வேலை - (1) கடலை, (2) வேற்படையை. சொல்லில்-மொழியில். தொழிலுவமை - செயல் உவமை. அலை ஆழியில் துயில் கொள் அரி - அலைகின்ற திருப்பாற் கடலில் அறிதுயில் கொள்கின்ற திருமால். (௬௧)

கொஞ்சமதி யிற்பெரிய மதியுடையொர் காணஒணுக்
குற்றமொரு நாள்படைத்தாய்
கூரறிவி னலறிஞர் ஆவலொடு காணக்
குழந்தையில் உயர்ந்ததிவனே

நஞ்சுபொதி வாளெயிற் றரவுபொர வேயுடல்
நடுங்கிப் பயந்தொளிப்பாய்
நாகப் பெரும்பகை துணுக்குற மயிற்பரி
நடத்திய சமர்த்தன் இவனே

கஞ்சமல ராளிசுதன் இடுசாப மேகொண்டு
கலையிழந் தேதிரிந்தாய்
கமலனைக் குடுமிகள் பிடித்துப் புடைத்துக்
கடுஞ்சிறை புரிந்ததிவனே

அஞ்சுமுக நாதனருள் ஆறுமுக நாதனுடன்
அம்புலீ யாடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனெ
டம்புலீ யாடவாவே.

(அ - ரை.) கொஞ்ச மதி - அற்பபுத்தி. கூரறிவினல் - மிகுந்த அறிவினல். நஞ்சு பொதிவாள் எயிற்று அரவுபொர-விடம் அடங்கிய வாள்போன்ற பற்களையுடைய பாம்பு தாக்க. நாகம் - பாம்பு. துணுக்குற - நடுங்குற. மயிற்பரி - மயிலாகிய குதிரை. கஞ்சமலராளி சுதன் - தாமரையில் உறைபவனுகிய பிரமன் புத்திரனுகிய தட்சன். கமலன் - பிரமன். (சுஉ)

ஒழியாத மறுவெனுங் குட்டரோ கத்தினல்
உடல்கூனி வீங்கிவாடி
உற்பலத் திருமலைதொ ழாதவர்கள் போலவே
உலகிடை பிறந்திருந்து

பழியால் வரும்பகைப் பாம்புனை விழுங்கவும்
பதைபதைத் தேசுழன்ருய்
பரிவினெடு சந்நிதி புகுந்தவர் பெரும்பிணி
பறத்துவது நீயும் அறிவாய்

விழியால் இவன்சிறிது கருணைபுரி யக்கூனும்
வெப்பும் தவிர்ந்ததுன் தன்
மேன்மைக் குலஞ்சொல்லும் வெந்துயர் ஒழிந்திடுவை
வெய்யபகை யும்துடைப்பாய்

அழியா வரம்பெறுவை அருள்பெறுவை முருகனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) மறு - களங்கம். கூனி - வளைந்து. உற்பலம் - குவளை. சுழன்றாய் - உழன்றாய். பரிவு-அன்பு. வெப்பு - ஆடு. (சுரு)

தமராகி ஆயிரத் தெட்டண்ட மேவிய
தைத்திய ரொடுஞ்சூரனும்
தம்பிமார் மைந்தர்கள் மகிழ்ந்திட இரத்தச்
சமுத்திரம் எழுந்துபொங்க

எமராயன் ஆகுமொரு நுளையன்வலை வீசியுயிர்
என்னுமீ னைப்பிடிக்க
ஈராறு செங்கதிர்கள் வனசமல ராகவே
எழுமுகில்சை வலமாகவும்

உமராக வேசூழ் உடுத்திர ளெலாமதில்
உதித்தபுற் புதமாகநீ
ஒருதோணி யாய்மிதந் தோடிக்க ளேபரத்
தோங்கல் தொறு மேங்கிமோத

அமராடு திண்டிறற் சேவகப் பெருமான்முன்
அம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) அண்டம்-உலகம். தமர்-சுற்றத்தார். தைத்தியர்-அசுரர். இரத்தச் சமுத்திரம் - இரத்தக் கடல். வனசமலர்-தாமரை மலர். சைவலம் - பாசி. உடுத்திரள் - நட்சத்திரக் கூட்டம். அமர் ஆடு - போர் செய்கின்ற. சேவகம் - வீரம். (சுசு)

புத்திதனில் இரவிநீ அட்டமம் செவ்வாய்
பொருந்திய களத்திரத்திற்
புதன்நாலின் மூன்றினிற் பொன்வெள்ளி ஆறினிற்
போற்றுசனி சென்மமாகத்

துத்திதிக ழும்படப் பாம்புகள் ஓர்ஒன்பதில்
தோன்றிப் பகைத்தபகையுந்
துட்டமிரு கங்களும் பேயுநோ யுங்கலித்
துன்பமும் வெம்புபடையுங்

கத்துபுன லுங்கனலு மவமிருத் துங்கொலைக்
காலனுஞ் செய்வினைகளுங்
கண்டதுண் டப்படக் கூவுசே வற்கொடிக்
கட்டியழி யாதசெல்வம்

அத்தனையு மேகொடுத் தன்பருடன் வாழ்பவனெ
டம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனெ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) இரவி - ஞாயிறு அட்டமம் - எட்டாமிடம். களத்திரம் - மனைவி. பொன் - வியாழன். வெள்ளி - சுக்கிரன். சென்மம் - சென்ம இராசி. துத்தி - புள்ளி. புனலும் கனலும்- நீராலும் நெருப்பாலும் உண்டாகிற துன்பங்கள். அவமிருத்து - காலமில்லாச் சாவு. கண்ட துண்டம் - துண்டு துணுக்கு. இச் செய்யுளிற் சோதிடக் குறிப்புக்கள் கூறப்பட்டுள்ளன. (௬௫)

மிடலொடு திசைசுமக் கின்றவே ழங்கவள
வேழஞ் சுமப்பதாக
மேதினியை முதலான புவனங்கள் தாங்குமக
மேருவே தூணதாகக்

கடலேழை யுங்குடித் தெழுமேகம் ஏழுங்
கடாம்பொழி கவுட்களாகக்
காஞ்சனச் சுவர்சுற் றும் அண்டமொரு கூடமாய்க்
கந்தமலை யிற்பிறந்து

திடமான தடைமீறி யேபூத வெளியெலாந்
தெருவீதி யாய்நடந்து
திங்களுன் கலைகளைக் கொம்புக்கு மாறெனச்
செங்கைநீட் டிப்பிடிக்கும்

அடல்ஆனை ஏறுங்கு மாரரா வுத்தனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) மிடல் - வலிமை. திசை சுமக்கின்ற வேழம் - திக்கு யானை. மேதினி - பூமி. கடாம்பொழிகவுட்களாக - மதம் பொழிகின்ற கன்னங்களாக. காஞ்சனம் - பொன். கலை - சந்திர கலை. மாறு - பகைமை. அடல் யானை - வலிய யானை, பிணிமுகம் ராவுத்தன் - யானைப் பாகன். (சுசு)

என்றைத் தடுத்துவெளி எல்லா மறைந்திட
எழுந்தசூர் மாவொர்அயிலா
லேறுபட் டிருதுண்ட மாகவொரு துண்டம்இவன்
ஏறுமயி லாகவொன்று

வென்றித் துணைச்சிற கடித்தண்ட கூடமும்
வெடித்திடக் கூவிவானின்
மீனைநெற் பொரியெனக் கொத்திக் கொறித்துனையும்
வெண்சோறி தென்றுதாக்கிக்

குன்றக் குறத்தியெம் பெருமாட்டி யைப்பெறுங்
குலமான் இருத்தல்கண்டுங்
கோமளக் குகன்இவன் விருப்பொடு தரித்திடுங்
குவளைச் சகாயன்என்றும்

அன்றைக்கு நின்னுயிர் கொடுத்தசர ணயுதனொ
டம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) என்று - சூரியன். சூர்மா - சூரனாகிய மாமரம். முருகக்கடவுளது வேலால் சூரன் அழிக்கப்பட்டபோது சேவலும் மயிலுமானான். வென்றி - வெற்றி. துணைச்சிறகு - இரண்டு சிறகு. வானின்மீன் - விண்மீன். கொறித்து - கடித்து. சரணாயுதன் - சேவற்கொடியோன். (சுஎ)

பணிலமுத் தும்பவள முஞ்சாலி னூடெழும்
பசும்பொன் னு நீலமணியும்
பன்னிறக் கதிர்விரித் தந்நிலத் தரசன்விற்
பான்மைகாட் டக்குரண்டம்

பிணிமுகத் துருவடைந் தருகுறுஞ் சேவலைப்
பேடுதே டப்பெடையினைப்
பேராத சேவற் பெருங்குருகு தேடவது
பேதைக் கடைச்சியர்கள்கண்

மணிநிழற் கதுவுறப் பார்த்துமகி ழக்கண்கள்
வாய்ந்தசிறை யும்படைக்க
மள்ளரது கண்டுகண் டேமுருகன் ஏறுமயில்
வாகனமிதென்று போற்றும்

அணிவயற் பண்ணைப் பதிக்குமர நாயகனொ
டம்புலீ ஆடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) சாலி - நெல். குரண்டம் - கொக்கு. கதுவுற - பற்ற. (சுஅ)

வன்புடைய கண்டக ரெனுங்கொடிய நிசிசரர்கள்
வாழ்பதிம கேந்திரத்தின்
மாமதி ளிடித்தவுண ரைக்கொன்று கொன்றுதிரை
வாரியிற் பிணநிரப்பித்

தென்புலத் தெப்புரமும் வீரசொர்க் கத்தினுஞ்
செருநருயி ரேநிரப்பித்
தேவலோ கத்தினிற் கற்பகச் சோலையில்
தெய்வச் செழும்பிடியுடன்

என்புநெக் குருகவுட லம்புளகம் வரமனமும்
இளகியிள கித்தெணீராய்
இருவிழியி னுந்தரள மாலைவர மால்கொண்
டிசைந்துதொழும் ஏழை அடியார்

அன்பெனுஞ் சேவகம் அடைந்தமத யானையுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) வன்பு - வலிமை. கண்டகர் - பாதகர். வாரி - கடல். தென்புலம் - எமன் உலகம். நெக்கு - நெகிழ்ந்து. புளகம் - மயிர்ச்சிலிர்ப்பு. தெணீராய் - தெளிந்தநீராய். மால் - ஆசை. (கூகூ)

திருமலைக் கயிலையில் பரமனுமை நடுவினில்
சேர்ந்திவன் இருக்குநாளில்
திருமால் அயன்சதக் கிருதுமுதல் அமரர்சூர்
செய்குறை இரந்துரைப்பப்

பொருபடைத் தலைவருந் தம்பிமா ருந்திறற்
பூதப் பெரும்படைகளும்
புடைவரத் திண்டேர் நடத்திமா யாபுரி
புகுந்தொரு பொருப்பினோடும்

ஒருதனித் தாருகனை வென்றவலி கண்டுகண்
டுரிமைபெறு தேவகிரிமேல்
உம்பரிறை யுங்கமல னுந்தேவர் யாவரும்
உவப்புடன் அருச்சனைசெயும்

அருமணிப் பரிபுரத் திருபதத் தொருவனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு இருப்பவனொ
டம்புலீ ஆடவாவே.

(அ - ரை.) சதக்கிருது - இந்திரன். புடை - பக்கம். தாருகன் - தாருகாசுரன். மணி - இரத்தினம். (எ0)

அ. சிற்றிற்பருவம்

[சிறு + இல் = சிற்றில். சிறுமியர் கட்டிய சிறு வீடுகளைச் சிதைத்தல். பதினேழாந் திங்களில் நிகழ்வது.]

கூண்ட மாயப் பரசமயக்
குழியின் வீழ்ந்தங் கழியாமற்
கொங்கை மலையும் மடவார்கள்
குழற்காட் டினும்போய்ச் சுழலாமற்

பூண்ட விரதச் சைவநெறி
புகுந்து சரியை கிரியையொடும்
புனிதச் சிவயோ கமும்புரிந்து
பூத வீட்டைச் சுத்திபண்ணி

ஆண்ட குரவன் உனதருளால்
அருள்முப் பொருளும் பிரித்தறிந்தங்
கத்து விதத்தின் உருவடைந்த
அடியார் சிரத்தின் அயன்பொறியைத்

தீண்டி அழிக்குஞ் சேவடியால்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையில்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) கூண்ட - கூடிய. பரசமய - புறமத. குழற்காடு - கூந்தற்காடு. சைவநெறி - சைவசமயம். சரியை கிரியை யோகம் என்பன ஞானத்தை அடைவதற்குரிய வழிகள். பூதவீடு - ஐம்பெரும் பூதங்களால் ஆகிய உடம்பு. குரவன் - ஆசிரியன். முப்பொருள் - பதி, பசு, பாசம். அத்துவிதம் - இரண்டறக்கலத்தல். அயன்பொறி - பிரமன் எழுத்து. செல் - மேகம். (எக)

நேய முடைய அடியவர்க்கு
நிகழுஞ் செனனப் பிணியல்ல
நித்தம் பரவுங் கடவுளர்க்கு
நிருதர் புரிந்த சிறையல்ல

மாய முடைய கிரவுஞ்ச
மலையுங் கடலுஞ் சூரும்அல்ல
வலிய குறவர் காவல் அல்ல
மழலைக் குறத்தி குமரும் அல்ல

தூய வமரர் முனிவர்சிவத்
துரோக மல்ல மேருவல்ல
துங்கச் சிலைவேள் உடலம் அல்ல
துதிக்கும் புலவர் வறுமையல்ல

தீய புரமும் அல அவைபோற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) செனனப்பிணி - பிறப்பு நோய். துங்கச் சிலைவேள் - உயர்ந்த வில்லையுடைய மன்மதன். இப்பாட்டில் செனனப் பிணி முதல் அல்ல என்று சொல்லப்படுகின்றவை எல்லாம் அழிக்கப்படவேண்டியவை. அவற்றை அழித்தது சரி எம் சிற்றிலை அழியாதே. (எஉ)

பாடக்கிடையாப் புகழைவெள்ளைப்
பாட்டிற் புனைந்து புகழ்ந்திடுவேம்
பவனி வரும்போ தயினிசுற்றிப்
பரவிப்பரவிக் கடன்கழிப்பேங்

கூடக் கிடையாத் திண்புயத்தைக்
கூடுங் குறத்தி குஞ்சரிக்குங்
குலவு மாய ரிகுளையராய்க்
குற்றேற வலிலே சஞ்சரிப்பேஞ்

சூடக்கிடையாத் தண்டையந்தாள்
துகளைத் துடைத்துத் தாலாட்டித்
தொட்டில் உழைவைத் தாட்டிடுவேஞ்
சோதிக் கடவு ளுமைமடந்தை

தேடக் கிடையாத் திரவியமே
சிறியேம் சிற்றில் சிதையேலே

செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) அயினிசுற்றி-ஆலத்தி எடுத்து. இருளை-தோழி. உழை - இடம். (எ௩)

வருநா மகட்குத் திருமடந்தை
மாமிக் கொடுமை புரியாமல்
மாமி தனக்குக் கலைவாணி
மருகிக் கொடுமை செய்யாமல்

ஒருநாட் கொருநாள் உவகைபொங்கி
ஒருவர்க் கொருவர் களிப்பெய்தி
ஒளிர்செங் கமல வெண்கமலத்
துறையும் பான்மை போன்மகிழ்ந்து

தருநா கரிகத் தாடவர்கள்
தன்மார் பினுநா வினுமேவித்
தவிராச் செல்வத் தொடுகல்வி
தழைத்துச் செழிக்கும் வடவாரித்

திருநா டுடைய குகப்பெருமாள்
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையில்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) மருகி - மருமகள். ஆடவர்கள் - திருமால், பிரமன் எனுமிருவர். வடவாரித் திருநாடு - வட ஆரிய நாடு. (எ௪)

தொனிக்குந் தொடிக்கைக் கடைசியர்கள்
துண்ணென் றெழுந்து குரவைசெய்து
துள்ளிப் புதுநீர்ச் செழுங்கழனி
தொறுநாள் நடவு தொடங்கிநட்டுத்

தனிக்கு மனத்தான் மருதநிலத்
தலைவர்ப் போற்றிக் கடமதுவைத்
தடக்கை வள்ளத் தினில்வார்த்துத்
தயவா யருந்த அம்மதுவுட்

பனிக்குங் கருணை முகம்அளக
பாரந் தோன்றப் பகைஇரவு
பரந்த தெனமள் ளரைநினைந்து
பகற்போ தினுமள் ளியர்க்காசை

செனிக்கும் பண்பை நகர்க்கரசே
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) தொடி - வளை. குரவை செய்து - குரவையாடி. நாள்நடவு - முதல் நாள் நடுதல். கடமது - குடக்கள். கைவள்ளம் - கையாகிய கிண்ணம். அளகபாரம் - கூந்தற்சுமை. மள்ளியர் - பள்ளியர். (எ௫)

அல்வைத் திடுங்கூந் தலம்பிடித்தெய்
வானைத் திருவைப் பரங்குன்றில்
அயிரா ணியும்விண் ணவர்க்கிறையும்
அளிப்ப மணஞ்செய் தருளினவன்

வல்வைத் திடும்பூண் முலைச்சிறுமி
வள்ளி தனையுந் தினைப்புனத்தில்
வரிவிற் குறவன் குறத்திதர
மணந்தான் என்று மொழிந்தேமோ

கல்விச் செருக்கால் விளையாட்டுக்
களிப்புச் செருக்கால் சூர்தடிந்த
கடிய செருக்கால் சமண்பகையைக்
கடந்த செருக்கால் இளஞ்செருக்கால்

செல்வச் செருக்கான் மனச்செருக்காற்
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) அல் - இருள். வல் - சூது கருவி. செருக்கு - வலிமை. இளஞ்செருக்கால் - வாலிப முறுக்கால். (எ௬)

காவிச் சுனைநீர் குடைந்தாடிக்
கரையி லிருந்த தொழுத்தைமனங்
கரையக் கருதி உருவேற்றிக்
கன்னி மாரை யும்பரவி

ஆவிப் புலனின் றுருகமகிழ்ந்
தாடிப் பாடி அங்கைகொட்டி
அருமைப் புகழைப் புகழ்ந்துபுகழ்ந்
தங்கம் பிரதக் கிணமாகத்

தூவிச் சிகரச் சினகரத்தைச்
சுற்றிப் பரிந்து கந்தசஷ்டி
சோம வாரங் கார்த்திகைநாள்
சுக்கிர வாரந் தோறும்வந்து

சேவித் துனையே தெரிசிப்பேஞ்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) குடைந்து - திளைத்து. தொழுத்தை - அடியாள். தொழும்பன்: ஆண்பால். அங்கம் பிரதக்கிணமாக - உடம்பால் வலமாக. சினகரம் - கோவில். சேவித்து - வணங்கி. (எஎ)

மருமா லிகைப்பூங் குழல்மடவார்
வாவி குடைய அவர்துகிலை
வாரிக் குருந்தின் மிசையேறி
மடநாண் விரகம் தலைக்கொண்டு

கருமா நாகஞ் செந்நாகங்
கலந்த தென அவ் வனிதையர்கள்
கையால் நிதம்பத் தலம்பொதிந்து
கருத்துந் துகிலு நின்றிரப்பப்

பெருமா யைகள்செய் திடைச்சியர்கள்
பின்னே தொடர வேயிசைத்துப்
பேய்ப்பெண் முலையுண் டுயிர்வாங்கிப்
பெண்க ளிடத்திற் குறும்புசெயுந்

திருமால் மருகன் அலவோநீ
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) மருமாலிகை - வாசனைப் பூ மாலை. துகிலை - உடையை. ஆடையை. வாரி - அள்ளி. குருந்தின் மிசை - குருந்த மரத்தின்மேல். விரகம் - ஆசை. கருமா நாகம் - கரிய பெரிய நாகம். வனிதையர் - பெண்கள். நிதம்பத்தலம் - அல்குல் இடம். இரப்ப - வேண்ட. பேய்ப்பெண் - பூதனை, கஞ்சனால் ஏவப் பட்டவள். (எஅ)

கந்தப் பதுமச் சரவணமும்
கந்த புரியும் கந்தவெற்பும்
கழுநீ ருதிக்குந் திருத்தணியும்
காஞ்சி புரத்தின் மாவடியும்

சொந்தப் புரிஏ ரகத்துடனே
சோலை மலையும் பரங்குன்றும்
துங்கத் திருவா வினன்குடியும்
சோதித் திருவேங் கடமலையும்

சந்தப் பொதியும் குற்றாலத்
தலமும் இலஞ்சித் தமிழ்ப்பதியுந்
தழைக்குங் கதிர்கா மத்தடமுஞ்
சயிலந் தோறும் விளையாடிச்

செந்திற் பதியும் புரந்தபிரான்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) கந்தம் - மணம். திருத்தணி - திருத்தணிகை. மாவடி - மாமரத்தினடி. ஏரகம் - சுவாமி மலை. சோலை மலை - அழகர் மலை. திருவாவினன்குடி - பழநி. துங்கம் - உயர்வு. சந்தப் பொதியும் - சந்தணப் பொதிகைமலை. குற்றாலம் - திருக்குற்றாலம். சயிலந்தோறும் - குன்றுதோறும். புரந்த - காத்த. கதிர்காமத் தடம் - கதிர்காம மலை ; இலங்கையிலுள்ளது. (எகூ)

பொன்னி னிறமாய்ச் சிவந்துமுளை
புறப்பட் டெழுந்து மரகதத்தின்
பொலிவு பெறவே குருத்துவிட்டுப்
பூத நாதன் படைபோல

மன்னு மருங்கிற் கிளைகிளைத்து
வள்ளற் குணத்தோர் செல்வமென
வளர்ந்து தூணி வனப்பிதென
வசியப் பசியப் பாம்பிதெனத்

துன்னும் பொதியாக் கதிரீன்று
துட்ட ரெனவே செம்மாந்து
சொல்லும் அறிஞர் போலருட்பால்
சுரந்து சுரந்து தலைவணங்குஞ்

செங்நெல் வயற்பண் பையம்பதியாய்
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்லுத் தவழுந் திருமலையிற்
செல்வா சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) மரகதம் - பச்சை. பொலிவு - தோற்றம்; எழுச்சி. மருங்கு - பக்கம். வள்ளற்குணம் - கொடையாளர் குணம். தூணி வனப்பு - அம்புக் கூட்டின் அழகு. வசியம் - மயக்கம். பசிய பாம்பு - பச்சைப் பாம்பு. கதிரீன்று - கதிரைத்தந்து, இப் பாட்டில் வரும் கருத்து, "சொல்லரும் சூல் பசும் பாம்பின் தோற்றம்போல் மெல்லவே கருவிருந் தீன்று மேலலார், செல்வமேபோல் தலைநிறீ இத் தேர்ந்தநூற், கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே" என்ற சிந்தாமணிப் பாட்டிலும் காணத்தக்கது. செம்மாந்து - இறுமாந்து, அருட்பால் - அருளாகிய பாலை. (அ0)

௯. சிறுபறைப்பருவம்

[சிறு ஓசைக் கருவிமீது ஒலியிட்டு மகிழ்தல். பத்தொன்பதாம் திங்களில் நிகழ்வது]

சங்குற்ற செங்கைதொட் டழல்கரிய தாகவே
சயமா முடித்து மேவுந்
தவிராத கற்புடைய தையலர்கள் பூண்முலைச்
சையோக மேத ணந்து

பொங்குற்ற பள்ளியுட் சப்ரமஞ் சத்தினிற்
பூவணையு மேது றந்து
பொதுமாதர் சேரியில் இராப்பகல் நடந்தவர்கள்
போகம் வேட் டிடும்வி டர்கள்போற்

கொங்குற்ற சோலையும் புளினமும் இகழ்ந்துபைங்
கூழ்ச்செந் நெலைத்து கைத்துக்
கோடுகொண் டிக்குக் குலங்களையு முறித்திளங்
கொடிவள்ளை யைக்க றித்துச்

செங்கட் கரும்பகடு சேருடும் வளநாட
சிறுபறை முழக்கி யருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கி யருளே.

(அ - ரை.) சங்கு - சங்கரேகை. சயம்-வெற்றி. சையோகம்- புணர்ச்சி. தணந்து - நீங்கி. சப்ரமஞ்சம் - கட்டில். பொது மாதர் - உருத்திர கணிகையர். வேட்டிடும் - விரும்பும். விடர் - தூர்த்தர். கொங்கு - வாசனை, தேன். புளினம் - மணல்மேடு, பைங்கூழ் - இளம்பயிர். துகைத்து - அழித்து. கோடுகொண்டு - கொம்பால், இக்குக்குலங்களை - கரும்புக் கூட்டங்களை. கரும்பகடு- கரிய எருமைக்கிடா. (அக)

வள்ளிமலை தனில்முதிய சிவமுனிவன் முன்னர்ஒரு
மான்வந் துலாவ மானை
மாமுனிவன் நயனத்தி னுற்புணர்ந் திடஅதன்
வயிற்றிடைக் கருப்ப மாகித்

துள்ளிஅயர் வோடுவயி றீற்றுளைந் தீன்றெயினர்
தொட்டகுழி இட்ட கலவுந்
துங்கச் சிலைக்குறவர் மரகதச் சிலையெனத்
தோகையைக் கண்டெ டுத்து

விள்ளுமுவ கைக்கடல் படிந்தவர்கள் சிற்றூரில்
விரைவினொடு கொண்டு வந்து
வீறுடன் வளர்த்துத் தினைப்புனத் தினில்வைத்த
வேட்டுவ மடந்தை கையால்

தெள்ளுதினை மாவுக் கவாவுற்ற மோகனே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை அருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) நயனம் - கண். ஈற்றுளைந்தீன்று - வருந்திக் கரு உயிர்த்து. எயினர் - வேடர். தொட்ட - தோண்டிய. சிலை - உரு. தோகையை - மயில்போல்வாளை. விள்ளும் - விரியும். சிற்றூர் - குறிஞ்சி நிலவேடர் ஊர். வீறு - பெருமை. அவாவுற்ற - ஆசைப்பட்ட. சிவமுனிவர் அருளால் வள்ளிநாயகியை மான் ஈன்றதாகப் புராணங் கூறும். (அஉ)

பெண்கள்சங் கத்தினே டிலவைநகர் விட்டுப்
பெயர்ந்துதிரு மலையின் மேவிப்
பிரசவேர் கல்லிப் பிடுங்கிவிளை யாடிஒரு
பேதைமடி யில்து யிலவுந்

தண்புனற் சுனையுண்டு பூவுண்டு நாளும்வட
சாரலிடை வைகு மெனவே
சண்முகப் பிள்ளைநீ யருள்புனைந் திடவுனைத்
தயவினொடு கண்டு போற்றிப்

பண்புபெற் றிடுசுப்ர மணியனொடு விக்கிரம
பாண்டியன் செங்கை யாலும்
பங்கயக் கண்ணனருள் குஞ்சரி குறத்திஇரு
பாவையர்கள் பார்வை யாலுந்

திண்புயத் தைந்துகட் குவளைசூ டுங்குளக
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) சங்கம் - கூட்டம். இலவைநகர் - இலஞ்சி. கல்வி- தோண்டி. பிரசம் - தேன். சாரல் இடை - மலையடிவாரத்தில். பங்கயற் கண்ணன் - தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால். குளக - குமர. (அரு)

வனமுழங் குங்கவிகள் தாவவளர் தெங்கின்மிசை
மலிமுப் புடைக்கனிகளும்
மாங்கனி பலாக்கனிகள் சம்பீர மென்கனிகள்
மாறுமல் வீழோசையும்

இனமுழங் கும்பழைய சைவர்கள் சிவாகமமும்
இன்னிசைத் தேவாரமும்
எங்கணும் பரவச முடன்பரவும் அடியவர்
இயம்பும்ஆ கரசத்தமுங்

கனமுழங் குங்கன முழக்கமும் வடவருவி
கல்லென ஒலிக்குமொலியுங்
கரகமுனி முதலினோர் வேதபா ராயணக்
கம்பலையும் உம்பர்முரசுந்

தினமுழங் குஞ்சித்திர சபைநடனன் அருள்புதல்வ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை அருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) கவிகள் - குரங்குகள், முப்புடைக்கனிகள், தேங் காய் நெற்றுக்கள். சம்பீரம் - எலுமிச்சை. இன்னிசை - இனிய பண். சத்தம் - முழக்கம். கரகம் - கமண்டலம். (அச)

தண்டைகள் சிலம்புகள் சதங்கைகள் பதங்களில்
சரிகலந் திசைமுழங்கத்
தாமரைப் பன்னிரு தடக்கையில் வியப்பொடு
தரித்தபொன் வளைமுழங்கத்

தொண்டர்கள் விருப்பொடு தெருட்பெறு திருப்புகழ்
துதித்திடு துதிமுழங்கச்
சுந்தரத் திருவரையில் அரைவடக் கிண்கிணிச்
சோதிமணி தான்முழங்க

அண்டருல கம்புவி அனந்தனுல கெவ்வுலகும்
அணிமணப் பறைமுழங்க
அறுசமயம் அல்லாத பரசமய வாதிகள்
அகத்தொடு மிகுந்தஅவுணர்

திண்திறன் மனத்திற் பெரும்பறை முழங்கநீ
சிறுபறை முழக்கி யருளே
செழுமறை முழக்கமுறு திருமலை அருட்குமர
சிறுபறை முழக்கி யருளே.

(அ - ரை.) இசை முழங்க - இசை எழுப்ப. வளை - வளையல். தெருள் - அறிவு. அனந்தன் உலகம் - நாகர் உலகம். பறை - கொட்டு. அகம் - செருக்கு. திண்திறல் - மிக்கவலி. (அ௫)

பொருவரிய கயிலைமலை அண்ணல்கைச் சூலமும்
போராழி யுங்குலிசமும்
பொங்குந் திருப்புகழ்ச் சாணைதீட் டிக்கதிர்
பொலிந்திலகு கூர்மைபெறவே

ஒருபெரிய வீரவேல் சூரனுர முங்கிரியும்
ஊடுருவி ஓடிமீள
ஒல்லையில் எறிந்துபகை வென்றுசே வற்கொடி
உயர்த்தசே வகமிருந்தும்

தருநிழலில் அரசுபுரி அரசனருள் குஞ்சரி
தடங்கண்வேற் கஞ்சியஞ்சித்
தையலவள் குங்குமச் சந்தனச் சேறுடன்
தகரமிரு மதமொழுகிய

திருமுலைக ளென்னுமிரு மலையரண் அடைந்தவன்
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை அருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) பொருவரிய - ஒப்பற்ற. சாணை - கத்தி முதலிய வற்றைக் கூர்மைப்படுத்தும் கருவி(கல்). உரம் - மார்பு. ஒல்லை - விரைவு. எறிந்து - வீசி. தருநிழல் - கற்பக மரத்தடி. மிருக மதம் - கத்தூரி. (அசு)

கத்துபுனல் அருவிசொரி பொதியமலை யில்திகழ்
கடத்தினில் இருந்தெழுகையாற்
கடலகடு புகுதலான் மலையையு முறித்துக்
கயற்புலம் அழுத்திவிடலால்

அத்தர்திரி கூடத்தர் திருமவுலி திண்டிநின்
றபிடேக மாட்டுகையினால்
அன்புட னடுத்தவர்க் கருள்புரிந் திடுகையால்
அழியாத சாபமிடலால்

பத்திமிகும் உத்தமத் தவமுனிவர் பாலிகல்
படைத்தகரை மீறிவரலால்
பாரமா கிச்சிறிய நாமமுற லால்கலை
படித்தகுறு முனியைமானுஞ்

சித்திர நதித்தலைவ முத்தமிழ் முதற்புலவ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை அருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) சித்திரநதி :—பொதிய மலையில் எழுதலால் (தோன்றுதலால்) கடத்தில் - காட்டில். கடலகடு - கடல் வயிறு. கயற்புலம் - கயல்மீன் இருக்குமிடம். (கடல்) அபிடேகமாட்டுகை யினால் - திருமுழுக்கு ஆட்டுதலால். படைத்த கரை - அமைத்த கரையை. சிறிய நாமம் - சிற்றாறு. மானும் - ஒக்கும். கலை படித்த- எல்லாக் கலைகளையும் ஓதியுணர்ந்த. குறுமுனி - அகத்தியமுனி. பொதிகைமலையில் கும்பத்தில் எழுதலால், வயிற்றில் கடல்நீர் பருகுதலால். மவுலி - முடி. அபிடேகமாட்டுதலால் - நீராட்டுத லால். இகல்படைத்தகரை - வலிமை படைத்த ஆடுகளை. சிறிய நாமம் - குறுமுனி. (அஎ)

உறுநாக மும்கமட மும்கனக மேருவுடன்
ஓரேழு திரைவாரியும்
உட்புறப் போராழி யும்சக்ர வாளகிரி
யும்திசை சுமந்தகளி றும்

இறுநாளில் அவையவை படும்பாடு படஅமரர்
ஏங்கிக் குதித்தாடவே
இப்படி மிகுத்தபகி ரண்டமு நடுங்கஅசு
ரேசன்மன முஞ்சலிப்ப

நறுநான வார்குழற் பதுமைமுதல் அவுணர்குல
நங்கையர்கள் மங்கலப்பொன்
நாணற் றுதிர்ந்துவிழ வேணுப் பெருஞ்சிலையில்
நாண்வளை தேற்றிவாங்கிச்

சிறுநாண் முழக்கிநிசி சரர்தள முழக்குநீ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை அருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) உறுநாகம் - உலகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதிசேடனாகிய பாம்பு. கமடம் - ஆமை. கனகமேரு-பொன் மலை. திசை - திக்கு. இறுநாளில் - முடிவு காலத்தில். அசுரேசன் - அசுரர் தலைவன். பொன்நாண் - பொற்றாலி. வேணு - மூங்கில். சிலை - வில். நாண் - நாரி. நானம் - கத்தூரி. (அஅ)

தையலர்கள் ஊடிபெழும் ஊடறீர்ந் திடஅவர்கள்
தாளையிளை ஞோர்கள் வருடிச்
சந்திர திலகங்குழைத் திந்துநுத லுக்கழகு
தருதிலக மேபுனைந்து

தொய்யில்எழு திக்கொங்கை மேலுத்தரீயமுஞ்
சுடர்மணிக் கலனும்வீக்கிச்
சுந்தரப் பொன்மேனி யணிபணி திருத்திவேல்
துணைக்கஞ் சனங்கள் தீட்டி

மையொழுகு குழன்முடித் தவர்முடித் திடவுமதில்
வண்டுமொய்த் திடுதல்கண்டு
வஞ்சியிடை முறியுமென அம்மலர் கழித்தும்பர்
வனமலர்கள் கொய்து சூட்டுஞ்

செய்யமணி மேடைதிகழ் பண்ணைநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) வருடி - தடவி. இந்து நுதல் - பிறைபோலும் நெற்றி. திலகம் புனைந்து - பொட்டிட்டு. தொய்யில் - சந்தனக் கோலம். உத்தரீயம் - மேலாடை. வீக்கி - கட்டி. பணி - நகை. வேல் துணைக்கு அஞ்சனம் தீட்டி - வேல் போன்ற கண்களுக்கு மைதீட்டி. மை - கருமை, மயிர்ச் சாந்து. உம்பர் வனமலர் - மேலிடச் சோலைப் பூக்கள். (அக)

மருவாத பாலையிற் பொய்யா மொழிக்குமுன்
வந்தொரு செழுங்கவிதையு
மாருன சூரன்முன் தம்பிநீ தூதுபோய்
வாவென் றியம்புமொழியுங்

குருவாக வந்தருண கிரியைத் திருப்புகழ்
கூறென முதற்சந்தமுங்
கும்பமுனி இருசெவி மனத்தொடு சீரமுங்
குளிரமுத் தமிழின் இயல்பும்

அருவாய் மிகுந்தபல வுருவாய் நிறைந்தருளும்
அப்பனுக் கொப்பிலாத
ஆனந்த மதுரரசம் ஒழுகுதே வாரமுடன்
அழியாத ஒருவாய்மையுந்

திருவாய் மலர்ந்துரைசெய் குமரகுரு நாதனே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே.

(அ - ரை.) மருவாத - மக்கள்பொருந்தாத. பொய்யா மொழி - பொய்யாமொழிப் புலவர். செழுங்கவிதை - சிறந்த பாடல். "பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே, என் பேதைச் செல்லற் கியைந்தனளே - மின்போலும், மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர் போம் கானவேல் முட்டைக்கும் காடு" - இதில் முட்டை என்ற இடுகுறி ஆக்கப்பெயர் முருகனால் சொல்லப் பெற்றது. தம்பி - வீரபாகு. அருணகிரியை - அருணகிரி நாதரை. முதற்சந்தம் - "கைத்தலம் நிறைகனி." கும்பமுனி - அகத்தியன். குளிர - இன்பமுற. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ். அருவாய் - வடிவில்லாததாய். ஆனந்த மதுர ரசம் ஒழுகு தேவாரம் - இன்பமான இனிய ருசிபொருந்திய தேவாரப் பாடல். (இது கூறியவர் திருஞானசம்பந்தராகிய முருகர்.) வாய்மை - உண்மை. (௯0)

கo. சிறுதேர்ப்பருவம்

[சிறுதேர் உருட்டி மகிழ்தல். இருபத்தொன்றாந் திங்களில் நிகழ்வது.]

இசைக்குழலும் வீணையுங் கஞ்சமும் பல்லியமும்
எல்லாம் பயின்றுபாடி
ஏறுதகராணைபரி தேருகைத் துங்கடல்கள்
ஏழையுந் துளியாக்கியே

வசைத்தொழி லரக்கர்கள் துணுக்கென மலைத்தமரர்
வஞ்சகமி தென்றயிர்ப்ப
வானவர்கள் தானவர்கள் செய்கையென் றேமதி
மருண்டுளம் வெருண்டுசோர

மிசைப்படு முடுக்கதிர் களைத்தலை மயக்கிமக
மேருவை முறித்துழக்கி
விண்டுவிண் டண்டங் குலுங்கக் குலுங்கநவ
வீரர்கள் இலக்கர்சூழத்

திசைக்கிரி யணைத்தையும் உருட்டிவிளை யாடுநீ
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே.

(அ - ரை.) கஞ்சம் - கைத்தாளம். பல்லியம் - பலவாத்தியம். தகர் - ஆடு. உகைத்து - செலுத்தி. அயிர்ப்ப - சந்தேகிக்க. தானவர்கள் - அசுரர்கள். மருண்டு உளம் வெருண்டு சோர - மயங்கி மனம் பயந்துதளர. தலைமயக்கிய - கலந்த. உழக்கி - கலக்கி. விண்டுவிண்டு - வெடித்து வெடித்து. சிவஞானமுத்தி - சிவஞானத்தால் அடையும் முத்தி. சிவஞானம் - அடிஞானம், திருவருள் ஞானம். (கூக)

புவியுலகு துயரகல அசுமேத யாகம்
புரிந்துபல வேள்வி ஆற்றிப்
புண்ணியமும் வீரமுஞ் செல்வமுங் கல்வியும்
பொன்றுத ஆடவர்களால்

அவியுணவை அனுதினம் விழைந்தும்பர் வாய்வயி
றணைத்துந் தெவிட்டவூட்டி
ஆனந்த மதுபெருகி மனதுருகி விழிசொருகி
அசையாமன் மேடைதோறுங்

குவிஉபய முலையின்மிசை வீணைசேர்த் துச்சுருதி
கூட்டிஎழு கரமுமூட்டிக்
கோதையர் குயிற்குதலை மழலைமொழி அமுதினொடு
கூடவா சிக்கும் இசையாற்

செவியுணவு மன்னவற் குதவுபண் பைக்கதிப
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே.

(அ - ரை.) அசுமேத யாகம் குதிரையைக்கொண்டு செய்யப் படுவதாகிய அசுவமேத யாகம் என்னும் வேள்வி. துய ரகல - துன்பம் நீங்க. பொன்றுத - கெடாத, அழியாத. அவிஉணவு - வேள்வி உணவு. விழைந்து - விரும்பி. உபய - இரண்டு. கோதையர் - பெண்கள். செவிஉணவு - செவிக்குணவு, கேள்வி.

(கூ௨.)

உகழும் பரித்தொகை கரித்தொகைபல் இரதமுடன்
ஒளிரும்வாள் அவுணர்மாள
உன்னுடைய போர்வாழி சென்றறுப் பச்சூரன்
ஒருவனே நின்றுநெஞ்சை

அகழும் பெருங்கவலை கொண்டதி சயித்துவிழி
அழலுகுத் தெயிறதுக்கி
அப்படி அவன்படையும் இப்படி முடிப்பனென
அன்னவன் முன்னியேவப்

புகழ்கொண்ட திறல்வீர வாகுவுடன் நவவீரர்
பூதர்கள் இலக்கர்தம்மைப்
புந்தியை மயங்கியொரு நொடியில்வா ரிக்கொண்டு
போயண்ட கோளகையின்மேல்

திகழிந்திர ஞாலப் பெருந்தேர் பறித்தநீ
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) உகளும் - தாவும், உகளும். பரி - குதிரை. கரி - யானை. அகழும் - தோண்டும். எயிறு அதுக்கு - பல்லைக் கடித்து. முன்னி - நினைத்து. நவவீரர் - ஒன்பது வீரர்கள். கோளகை - வட்டம். இந்திர ஞாலப் பெருந்தேர் - இந்திரஞாலம் என்ற பெரிய தேர். (கூங)

உருத்தார வாரித் திடுங்கொடிய நிசிசரர்
உமாபதி வலக்கண்ணெதிரும்
ஒருமருக னடவுகளி றெத்திருந் தோடவே
உம்பர்கோ மான்புரக்கும்
தருத்தாம நந்தனவனஞ்செழித் ததிலுறு
சராசரம் எலாந்தழைப்பச்
சாபநா ணும்பூணு மாபரண முந்திகழ
சரக்கறை மிகத்தழைப்ப
மருத்தா மரைத்தவி சுடைப்பாக னுஞ்சிலை
வளைத்தெய்தி டாதகணையும்
வாசியும் பேசிய திருப்புகழ் விருப்புடன்
வழுத்தித் துதிக்கவந்த
திருத்தாதை ஏறும் பெருந்தேரும் வாழ்கவே
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) உருத்து ஆரவாரித்திடும் - கோபித்து முழக்கம் செய்யும். நிசி - இருள். நிசிசரர் - இருளில் சஞ்சரிப்பவர்களாகிய அசுரர்கள். தருதாம நந்தனவனம் - தருக்களை உடைய மாலைகளைத் தருகின்ற நந்தவனம். சாபநாண் - வில்நாண். மரு - வாசனை. தவிசு - இருக்கை. (கூச)

கனந்திகழ் கிரிக்குலம் இரண்டையும் எறிந்துவெங்
காஞ்சனத் தளிர்மாவையும்
கண்டதுண் டப்பட முறித்திரு வகைப்புலவர்
காரகந் தூள்படுத்தி

இனந்தனை முடிந்தவன் இவன்றனையும் வெல்வதற்
கிதுசமயம் என்றுமலைகள்
எல்லாந் திரண்டுபய மாகிமா வடிவுடன்
இணங்கிஅம ராடுவனபோல்

வனந்தனை விருப்பொடு புரந்தருள் குறத்திமான்
மதம்ஒழுகு வனமுலைகளும்
வள்ளைச் செழுங்குழையில் வாசக் கருங்குழலில்
வாவிவிளை யாடுவிழியுந்

தினந்தின முரத்தொடு பொரக்குழையும் விரகனே
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) காஞ்சனத்தளிர்-பொன்போன்ற தளிர். காரகம்-கருவி. அமராடுவன - போர் செய்வன. வனம் - காடு, அழகு. உரம் - மார்பு. (கூ)

பெருகுகரு ணைக்கடல் உவட்டெறிந் தருளொழுகு
பெரியபன் னிருவிழிகளும்
பேரழகு பெறுநுதல் களுந்திலத முந்தெருட்
பிரணவம் சொலும்வாய்களும்

இருவனிதை யர்க்குமயல் செயுமந்த காசமுடன்
இலகும்ஈ ராறுகுழையும்
ஏரிலகு நாசிகள் கபோலங்கள் அத்தனையும்
எழில்சிறந் தொளிததும்பி

முருகுகமழ் சண்முகத் தாமரைக ளேபின்னு
முன்னும்விக சித்திடுதலால்
முத்தமிழ்ப் புலவர்க்கும் அடியர்க்கும் அமரர்க்கு
முனிவரொடு சூரனுக்குந்

திருமுதுகு தாராத தண்ணளிச் சேவகன்
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) உவட்டெறிந்து - பெருக்கெடுத்து. பிரணவம் - ஓங்காரம். மந்தகாசம் - புன்சிரிப்பு. குழை - குண்டலம். ஒளி ததும்பி - ஒளி நிரம்பி. முதுகுதாராத - புறங்காட்டாத. (கசு)

அரிக்கும்அய னுக்கும்வெரு வாதசூர் வென்றதுகை
அயிலோஅன் னோர்கள்படையோ
அப்பனுக் கும்பொருள் நிரப்பிய குருக்களென்
றாரணத் தொகைபுகலுமே

பரிக்குமயி லுக்குமொரு சேவற் கொடிக்கும்இணை
பகரஒரு பொருளும்இல்லை
பதினா யிரங்கோடி மன்மதன் அழகுநின்
பாததூ ளிக்குநிகரோ

புரிக்குளுயர் பொன்னுலகு நின்னுடைய பண்பா
புரிக்குநிகர் ஒப்பாகுமோ
பூதரம் எலாமிருந் துஞ்சுனையி லோர்குவளை
பூத்ததிரு மலைஒக்குமோ

தெரிக்கில்உல கத்துவமை இல்லாத தெய்வநீ
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) வெருவாத - அஞ்சாத. கைஅயிலோ - கையிலுள்ள சிறு வேற்படையோ. ஆரணத்தொகை - வேதத் தொகுதி. இணைபகர - ஒப்புரைக்க. பாததூளிக்கு நிகரோ - அடித்தூசிக்கு ஒப்போ. பொன் உலகு - அமராவதி. (கஎ)

பாரோடு பதினாலு லோகத்தில் உள்ளவெம்
பழியோடு பாவம்ஓடப்
பஞ்சம்ஓ டக்கொடுமை யஞ்சிஓ டத்தமிழ்ப்
பாவலர்கள் வறுமைஓடச்

சூர்ஓட அவுணர்கள் பயந்தோட வானவர்கள்
துன்பங் கலங்கியோடச்
சொல்லோடு பழகாத புலவரோ டப்பழைய
தொண்டர்மன மாயையோட

வாரோடு கொங்கைமட வாரோடு மிளைஞர்தம்
மனையோடு மேவிவாழ
வந்துதெரி சித்துளோர் பிணிஓட அங்கவர்
மனத்துயர் அனைத்தும்ஓடத்

தேரோடி வரும்வீதி திகழ்பண்பை வாழவே
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) வெம்பழி - கொடிய பழி, வசை. பாவலர்கள் - கவிராயர்கள். மாயை - அறியாமை யிருள். பிணி - நோய். (கூஅ)

பொன்மௌலி யும்கருணை பொழிவதன மும்திருப்
புருவமும் நெற்றியழகும்
புண்டரிக நயனஅரு ளும்குழைக ளும்தமிழ்ப்
புத்தமுத மொய்த்தவாயும்

வின்மலிந் திலகுகூ ரியதுண்ட மும்கவின்
விளங்கியக போலங்களும்
வெண்தரள மாலையணி கண்டமுந் திண்புயமும்
வேலுமுள ரிக்கைகளும்,

பன்மணியு நூலுமணி மார்பமுந் தோயாத
பட்டுடையும் மிக்கதண்டைப்
பாதமுந் தோகைமயி லும்சிந்தை யுள்ளே
பதித்துத் துடிக்கும் அடியார்

சென்மஇருள் முழுதும்விடி யக்கூவு சேவலாய்
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) வதனம் - முகம். புண்டரிகநயனம் - தாமரைக் கண்கள். மொய்த்த - நிறைந்த. வில் மலிந்து இலகு கூரிய துண்டம் - ஒளி நிறைந்து விளங்குகின்ற கூரிய மூக்கும். கபோலம் - கன்னம். கண்டம் - கழுத்து. பாதம் - அடி. தோயாத பட்டுடையும் - நீரில் அடித்துத் துவைக்கப் பெறாத பட்டாடையும். துடிக்கும் - பதைக்கும், உருகும். விடிய - நீங்க, வெளியாக. (கக)

மங்கல மடப்பிடி குறக்கொடி இடத்தினும்
வலத்தினும் இருந்துவாழ்க
மாமயிலும் வாழ்கஅதன் மேலிலகு நூபுரம்
வணைந்தசே வடியும்வாழ்க

பொங்கொளி தயங்குதிரு ஆபரண முந்நூல்
புனைந்திடுபொன் மார்பும்வாழ்க
போர்வேலும் ஈராறு செங்கையும் பன்னிரு
புயங்கள்சுந் தரமும்வாழ்க

தங்குகரு ணைக்கண்கள் ஆறிரண் டுந்திருச்
சண்முகத் தருளும்வாழ்க
தாழ்குழைமுந் நான்கிநெடு பவளவா யாறுடன்
றடமகுட மினிதுவாழ்க

திங்கண்மும் மாரிபொழி யச்சேவல் வாழ்கநீ
சிறுதேர் உருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உருட்டியருளே.

(அ - ரை.) மடப்பிடி இடத்தினும் - அழகிய தெய்வயானை இடப்பக்கத்திலும். குறக்கொடி - வள்ளி. நூபுரம் - பரிபுரம், சிலம்பு. முந்நூல் - முப்புரிநூல். சுந்தரம் - அழகு. மகுடம் - முடி. உருட்டியருளே - உருட்டி அருள். (கoo)

திருமலைமுருகன் பிள்ளைத்தமிழ்

முற்றும்

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

முருகன் பிள்ளைத்தமிழ்
நூல்கள்

முருகன் பிள்ளைத்தமிழ் நூல்களில் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களும் அரிய குறிப்புரை விளக்கங்களுடன் கழகவழி வெளிவந்துள்ளன. ஏனைய மூன்றும் விரைவில் வெளிவரும்.

	ரூ.	அ.
முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	1	0
திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்	1	0
திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்	1	0
திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ்	1	0
சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்	1	0